# எழுகதிர்

ஐரோப்பிய பதிப்பு

ELUKATHIR

Rs20 Euro0.50

வாரஇதழ் இதழ்: 79 11.03.2014


## இலங்கையில் தீர்வுக்கு தென்னாபிரிக்கா ஆதரவு!

இலங்கையில் உள்ளக பொறிமுறைமை ஒன்றின் மூலம் நிரந்தரமான தீர்வுத் திட்டம் ஒன்றை எட்டுவதற்கு பூரண ஆதரவளிக்கப்படும் என தென் ஆபிரிக்கா தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 25ம் அமர்வுகளில் உரையாற்றிய தென் ஆபிரிக்க சர்வதேச விவகார அமைச்சர் எமலி நிகோனா மாஷபானே இதனைத் தெரிவித்துள்ளார்.
மனித உரிமைப் பேரவையில் இலங்கை விவகாரம் சில காலமாக தேங்கிக் கிடப்பதாகத் தெரிவித்துள்ளார். உள்ளக பொறிமுறைமை ஒன்றை அமைத்து அதன் மூலம் தீர்வுகளை எட்ட இலங்கைக்கு சர்வதேச சமூகம் வாய்ப்புக்களை வழங்க வேண்டுமென குறிப்பிட்டுள்ளார். தமது பிரச்சினைகளுக்கு நாமே உள்ளக பொறிமுறைமை ஒன்றின் தீர்வுகளை எட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

# போர்க்குற்ற விசாரணை: தீர்மானிக்கவேண்டியவர்கள் இலங்கை மக்கள் மட்டுமே!



இலங்கையில் இடம் பெற்ற போர்க் குற்றம் தொடர்பாக விசாரணை செய்ய வேண் டுமாயின், அதனை ஐ.நா மனித உரிமைகள் பேரவை செய்ய முடியாது இலங்கை மக்களே அது தொடர்பாக தீர்மானிக்கவேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
கம்பஹாவில் இடம் பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித துள்ளார்.
இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,
போர்க்குற்றம் தொடர்பில் விசாரணை செய்ய வேண்டுமாயின், அதனை இலங்கை மக்களே முடிவு செய்ய வேண்டும்.போர் நடைபெற்றது சரியா, தவறா என இந்த நாட்டு மக்களே முடிவு செய்ய வேண்டும்.
யுத்தம் சரியானதா இல்லை தவறானதா என்பதனை மக்களே தீர்மானிக்க வேண்டும் எனவும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை இது குறித்து நிர்ணயிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்
இலங்கை மக்கள் யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடாத்துமாறு கோரியிருந்தால் அதனை ஏற்றுக்கொள்வதாகவும் ஆனால் சர்வதேச அழுத்தத்தங்களுக்கு நாம் செவிசாய்க்கவேண்டியதில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## நாட்டின் சிறப்புரிமைகள் அனைவருக்கும் சரிசமம்!

நாட்டின் சிறப்புரிமைகள் அனைவருக்கும் சரிசமமான வகையில் கிடைக்க வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.
அனைவரையும் சரிசமமாக நடத்துவது இன்றைய அரசாங்கத்தின் கொள்கை எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.
இன பேதம் ,மத பேதம் , பிரதேச பேதம் எதுவும் பார்க்க மாட்டோம் எல்லா மக்களும் ஒன்றுதான் அரசாங்கத்தின் தற்போதைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் மூலம் கிடைக்கும் பிரதிபலன்கள் சகலருக்கு சமமான கிடைக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.
அரசாங்கத்தின் தற்போதைய அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் மூலம் கிடைக்கும் பிரதிபலன்கள் சகலருக்கு சமமான கிடைக்கும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.
மலையகத்தில் நிரந்த தபால் சேவைக்கு 386 பேருக்கு நியமனங்களை வழங்குவதற்காக கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.அங்கு தொடர்ந்தும் பேசிய அவர், மலையக தோட்டபுற மக்களுக்காக அரசாங்கம் முக்கியமான வேலைத்திட்டங்களை செய்து முடித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் நிலைமைகளை மனித உரிமை பேரவையில் அரசியலாக்க முயற்சி!

இலங்கையின் நிலைமைகளை மனித உரிமை பேரவையில் அரசியலாக்க முயற்சிப்பதாக அரசாங்கம், ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவில் தெரிவித்துள்ளது.
ஐக்கிய நாடுகள் செயலாளருக்கு ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பித்துள்ள இலங்கை தொடர்பான உள் மதிப்பீட்டு அறிக்கையில் தவறான குறிப்புகளுக்கு வலுவான இடமளிக்கப்பட்டுள்ளது.
அறிக்கையில் செயல்முறை அடிப்படையில் அமையாத நம்பத்தகுந்த ஆதாரங்கள் இல்லாத தகவல்களின் அடிப்படையிலோன விடயங்கள் அறிக்கையில் உள்ள டக்கப்பட்டுள்ளதுடன், பேரவையில் இலங்கையின் நிலைமைகளை அரசியலாக்கும் இன்னுமொரு முயற்சியாக கையாளப்பட்டுள்ளது என இலங்கை பிரதிநிதி கூறியுள்ளார்.
எவ்வாறாயினும், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் செயற்பாடுகளுக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் எனவும் இலங்கை பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.
நாம் முன்னிலைப்படுத்தியுள்ள ஆணையாளரின் ஆறு கருப்பொருள் நாடுகள் அதிகமான முன்னுரிமைகளை வழங்க வேண்டும். பொருளாதாரம், சமூக மற்றும் கலாசார உரிமைகள் உள்ளிட்ட உரிமைகளின் அபிவிருத்தி தொடர்பில் முறையாக கவனத்தை பெற வேண்டும் என நாம் நம்புகிறோம் என இலங்கை பிரதிநிதி தெரிவித்துள்ளார்.




## ஜனாதிபதிக்கு ஆதரவாக தமிழ் மக்கள் பேரணி!

கல்முனை சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதிக்கு ஆதரவாக கடந்த ஞாயிறன்று (09.03.2013 ) மாபெரும் பேரணி ஒன்று இடம்பெற்றது.
கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத் திலிருந்து புறப்பட்ட இந்த பேரணி கல்முனை பிரதான சாலைகள் மற்றும் தரவை பிள்ளையார் ஆலயம் வழியாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை சென்றடைந்தது.
ஐ.நா. மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ள தற்போதைய சூழ்நிலையில் இந்த பேரணியில் தமிழ் மக்கள் கலந்து கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பினால் வேண்டுகோள் விடுக்கப்ப ட்டடிருந்தபோதிலும் பெண்கள் உள்ளடங்கலாக பெரும் எண்ணிக்கையிலானோர் இ;ந்தப் பேரணியில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.
பேரணியில் கலந்துகொண்டவர்கள் ஜனாதிபதியின் உருவ ப்படம் , தேசிய கொடி மற்றும் ஜனாதிபதிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலான பதாதைகளை ஏந்தியவாறு காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.
பேரணி முடிவில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் கே. லவநாதனிடம் குறிப்பாக பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை

(11ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீதி புனரமைப்பு

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்திற் குட்பட்ட மூன்றுமுறிப்பு துணுக்காய் பிரதான வீதி, இராணுவத்தினராலும் அப்பகுதி பொதுமக்களின் உதவியுடனும் தற்காலிகமாக புனரமைக்கப்பட்டு வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரி.பிருந்தாகரன் தெரிவித்தார்.

மூன்று முறிப்பு, கொம்புவைத்தகுளம், இளமருதங்குளம், வீரப்பராயர் குளம், பனங்காமம், நட்டாங்கண்டல் ஆகிய கிராமங்களிற்கான பிரதான வீதியாக காணப்படும் மேற்படி வீதியானது, கடந்த முப்;பது ஆண்டுகளிற்கு மேலாக எந்;தவிதமான புனரமைப்புப் பணிகளும் மேற்கொள் ளப்படாமல், குண்டும் குழியுமாக மக்கள் பயணம் செய்ய முடியாத நிலையில் காணப்பட்டது.

மேற்படி கிராமங்களைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் மடுப் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட வலயன்கட்டு, விளாத்திக்குளம், முள்;ளிக்குளம், வேலான்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களும் வவுனியா பிரதேசத்திற்கு உட்பட்ட பூவரசங்குளம், கல்மடு, கிடாச்வரி போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்களும் இவ்வீதியைப் பயன்படுத்தி வந்தனர்.

பெருமளவான மக்கள் பயன்படுத்தும் இந்த வீதியினை, இராணுவத்தினரும் இப்பகுதி மக்களும் இணைந்து தற்காலிகமாக புனரமைத்து வருவதுடன், இதற்கு பிரதேச செயலகமும் உதவி செய்து வருவதாக பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார்.

## நூல்கள் அன்பளிப்பு

கொழும்பு தமிழ்ச் சங்கத்தினால், யாழ்.மத்தியகல்லூரி மாணவர்களின் வாசிப்பு திறன் மேம்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக 1 இலட்சம் ரூபா பெறுமதியான நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன.



கொழும்பு தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபருமாகிய இ.ஓங்காரமூர்த்தி மேற்படி நூல்களை யாழ ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில் வேந்தனிடம் கடந்த வாரம் கையளித்தார்.

## இலவச மருத்துவ முகாம்


பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச்சங்கத்தின் லண்டன் கிளையின் அனுசரணையில், சாவகச்சேரி லயன்ஸ்கழகம், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச்சங்கம், நீரிழிவு சிகிச்சை மையம், உரும்பிராய் லயன்ஸ் கழகம் ஆகியன இணைந்து இலவச மருத்துவ முகாமொன்றை கிளிநொச்சி பளை மத்திய கல்லூரியில் நடத்தியது

இந்த இலவச மருத்துவ முகாமில், இரத்த அழுத்தப பரிசோதனை, நீரிழிவுப் பரிசோதனை, பொது மருத்துவப் பரிசோதனை, கண் பரிசோதனை, பார்வை குறைந்தவ ர்களுக்கான கண்ணாடி வழங்கல், கர்ப்பிணித்தாய் மாருக்கான சத்துணவு வழ்ங்கல் உள்ளிட்ட மருத்துவ சேவைகள் இடம்பெற்றன.

## குடிநீர் இணைப்பு

ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமூர்த்தி உதவி பெறும் மேலும் 100 குடும்பங்களுக்கு இலவசமாக குடிநீர் இணைப்புப் பெறுவதற்கான கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஏறாவூர் சிறுகைத்தொழில் பேட்டையில் மாகாண அமைச்சர் நஸீர் அஹமட்டின் இணைப்பாளர் யூ.எல்.



முஹைதீன்பாவா தலைமையில் இடம்பெற்ற இந நிகழ்வில், கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி சுற்றுலாத்துறை அமைச்சர் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு குடிநீர் இணைப்புப் பெறுவதற்கான இலவசக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

சமூர்த்தி உதவி பெறும் ஒரு குடும்பத்திற்கு குடிநீர் இணைப்புப் பெறுவதற்காக ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் செலுத்தப்படுகின்றது.

அமைச்சர் நஸீர் அஹமட் தனது சொந்த நிதியிலிருந்து 30 குடும்பங்களுக்கு நிலத்தடி நீ.ர் குழாய்க் கிணறு அமைப்பதற்கான கட்டணத்தைச் செலுத்தியுள்ளதாக அமைச்சரின் இணைப்புச் செயலாளர் யூ.எல்.முஹைதீன பாவா இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை மேலும் 70 குடும்பங்களுக்கு தேசிய நீர் வழங்கலில் இருந்து குழாய் நீர் இணைப்புப் பெறுவதற்கான கட்டணமாக ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுப்பனவும் வழங்கப்பட்டது.

## பல்கலைக்கழக அடிக்கல் நாட்டு விழா

ஏறாவூரில் அறபுக் கல்லூரியும் பல்கலைக்கழகமும் நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, காட்டுப்பள்ளி வீதியில் அமைந்துள்ள குல்லியத்துதாறில் உலூம் அறபுக் கல்லூரியில் இடம்பெற்றது.

மாகாண அமைச்சர் நஸீர் அஹமட்டின் இணைப்பாளர் யூ.எல்.முஹைதீன்பாவா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி சுற்றுலாத்துறை அமைச்சர் நஸீர் அஹமட் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். அத்துடன், அரபு நாட்டு நன்கொடையாளர்களான அப்துல் றப் அல் ஈஸாயி தலைமையிலான ஐவரடங்கிய குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சுமார் 16 கோடி ரூபா மதிப்பீடு கொண்டதாக இந்த அறபுக் கல்லூரியும் உத்தேச பல்கலைக்கழகத்துக்குமான இந்த நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்படுவதாக அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இந்த உத்தேச சர்வதேச அரபுப் பல்கலைக்கழகத்துக்கான இடம் சுமார் நூறு ஏக்கர் விஸ்தீரணத்தில் அமையும் என்றும் அதற்கான முன்னோடி நடவடிக்கைகளைத் தாம் ஆரம்பித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

அரபுக் கல்லூரியின் நிர்மாணப் பணிகளுக்காக அமைச்சர் நஸீர் அஹமட் தனது சொந்த நிதியிலிருந்து 50 இலட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## பெண்களுக்கான அரபிக் கல்லூரி

கிண்ணியா, மாஞ்சோலை பகுதியில் பெண்களுக்கான அரபிக் கல்லூரியொன்று திறந்து வைக்கப்பட்டது.

கிண்ணியா எம்.பைஸால் மௌலவி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எம்.இம்ரான் மஹ்ரூப் மற்றும் சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் கலந்து கொண்டு திறந்து வைத்தனர்.

இப்பிரதேசத்தில் பெண்களுக்கான மதரஸா ஒன்று இல்லாதனால் பெண்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். தற்போது இம்மதரஸா திறந்து வைப்பதனால் பெண்கள் மார்க்கக் கல்வி பெற்றுக் கொள்வதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது' என பொதுமக்கள் தெரிவித்தனர்.

# 23 ஆண்டுகளின் பின் பளையைச் சென்றடைந்த யாழ்.தேவி!

23 ஆண்டுகளுக்குப் பின்னர் கொழும்பிலிருந்து பளை வரையான ரயில் சேவை கடந்த வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்டது இதுவரை வட பகுதிக்கான ரயில் மார்க்கத்தில் கிளிநொச்சி வரை முன்னெடுக்கப்பட்ட ரயில் சேவை கடந்த வாரம் முதல் பளை வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.




கோட்டைக்கும் பளைக்கும் இடையிலான ரயில் சேவை தினமும் முன்னெடுக்கப்படுகி;ன்றதுது.

அதன்படி தினமும் காலை 05.45 இற்கு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் யாழ்தேவி ரயில் பிற்பகல் 1.21இற்கு பளையை சென்றடையும்.

பளையில் இருந்து கொழும்பு வரை பயணிக்கும் யாழ்தேவி ரயில் காலை 10.40இற்கு புறப்பட்டு மாலை 6.25இற்கு கொழும்பை வந்தடையும்.

இதேவேளை பளைக்கும் கொழும்பிற்கும் இடையிலான கடுகதி ரயில் சேவை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

காலை 06.50 இற்கு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து புறப்படும் இந்த கடுகதி ரயில் நண்பகல் 12.27 இற்கு பளையை சென்றடையும்.

பளையில் இருந்து கொழும்பு வரை பயணிக்கும் கடுகதி ரயில் பிற்பகல் 02.15இற்கு புறப்பட்டு இரவு 08.05இற்கு கொழும்பை வந்தடையும்.

இதேவேளை, கொழும்பிலிருந்து யாழ். பளை வரையில் குளிரூட்டப்பட்ட சொகுசு ரயில் ஒன்றையும் புதிதாக சேவையில் ஈடுபடுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
Elukathir Weekly
Kandy Road, Karaddypokku, Kilinochchi
elukathirnews@gmail.com
முகநூல்: Elukathirthagaval

## நமது நோக்கு

# மனிதஉரிமை விவகாரம்: கூட்டமைப்பின் உணரல்

வருடாவருடம் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணைய கூட்டம் இலங்கையின் அரசியலை மட்டுமன்றி அனைத்து தரப்பையுமே சிலகாலம் தன்வசப்படுத்திவிடுகின்றது.

இந்தக் கூட்டத்தொடர் இலங்கையில் இருதரப்பினரையும் தத்தம் தேவைகளுக்கு ஏற்ப இரண்டுபட வைத்து விடுகின்றது. அரசதரப்பு அந்த மாநாட்டில் இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கப்படும் தீர்மானத்திற்கு எதிராக தனக்கு ஆதரவு தரக்கூடியவர்களை அணிதிரட்டுவதுடன், தனது பக்க நியாயங்களை முன்வைப்பதில் கவனத்தைச் செலுத்த, தெற்கில் எதிரணி அரசியல்வாதிகளோ அந்த பிரச்னையை அரசுக்கு எதிராக எப்படியெல்லாம் திருப்பமுடியுமோ அப்படியெல்லாம் திருப்ப முயற்சிக்கிறது. ஆனாலும் தேசிய நலன் என்று வருகின்றபோது தெற்கு எதிரணியினரும் அரசின் பக்கம் நிற்க முற்படுவதைக் காணலாம். உதாரணத்திற்கு படையினர் மீதான சர்வதேச விசாரணை என்று வந்துவிட்டால் ஐக்கிய தேசியக் கட்சி போன்ற எதிர்க்கட்சியினரும் அதற்கு எதிராக அணிதிரள்வதை அவதானிக்கலாம்.

தமிழர் தரப்பு பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக மட்டுமே காட்டிக்கொள்கின்ற அதேவேளை, அதனூடாக இந்த நாட்டுக்கு ஏற்படுகின்ற அபகீர்த்தியைப் பற்றி கிஞ்சித்தும் அக்கறைப்படாத போக்கையே வெளிப்படுத்தி வருகின்றது. தமிழ்தரப்பின் இந்தப் போக்கு இந்த நாட்டில் மேலும் இனங்களுக்கு இடையே பகைமையை வளர்க்க உதவுகின்றதே தவிர, வேறு எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப் போவதில்லை.

இந்த மார்ச் கூட்டத்தொடர் பற்றிய பரபரப்பு கடந்த ஆண்டுக் கடைசிக் காலங்களிலேயே ஆரம்பித்திருந்தது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம், பிரிட்டன் பிரதமர் கமரூனின் யாழ்ப்பாணத்திற்கான பரபரப்பு மிக்க விஜயம் என்பவற்றினூடாக ஆரம்பமான இந்தப் பரபரப்பு இந்த கூட்டத்தொடரையொட்டி மிகநீண்ட மாதங்களாக அனைவர் கவனத்தையும் ஈர்த்திருந்தது. அதனால்தான் தமிழர் தரப்பின் ஏகபோக தலைமையை தம்வசம் வைத்திருக்கும் கூட்டமைப்பினர் அந்த மாநாட்டில் இலங்கைக்கு எதிராக பூகம்பமே வெடிக்கப்போகின்றது என்று கதைவிட்டுக்கொண்டிருந்தனர். அதன் மூலம் தமிழ்மக்களுக்கு என்ன பயன் கிடைக்கப்போகின்றது என்பதை சொல்வதற்குப்பதிலாக, அரசாங்கத்திற்கு ஆபத்து காத்திருக்கின்றது என்ற மாயைத் தோற்றத்தையே கடந்த காலங்களில் ஏற்படுத்தி வந்தனர். எப்போதும் அரச எதிர்ப்பு மனநிலையில் வளர்க்கப்பட்ட தமிழ்மக்களும் தமது நலன்களைப்பற்றி அல்லாது, அரசாங்கத்திற்கு கிடைக்கப்போவதாகக் கூறப்பட்ட நெருக்கடிகளை நினைத்து சந்தோசத்தில் இருந்தனர்.

அதற்கு முன்னர் ஐநா மனிதஉரிமை ஆணையத்தில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா இரண்டு தீர்மானங்களை சமர்ப்பித்திருக்கின்றது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதலாவது தீர்மானத்தை சமர்ப்பித்த போது அதனை இந்தியாவே நீர்த்துப்போகச் செய்ததாகவும், இல்லையேல் அது இலங்கைக்கு பல சங்கடங்களை உருவாக்கி இருக்கும் என்று கூறப்பட்டது. கடந்த ஆண்டு இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோதும் அதேகருத்து நிலவியது. ஆனால் முதலாவது தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டபோது அது தங்களினாலேயே சாத்தியமானது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினர் சுமந்திரன் அப்போது தெரிவித்திருந்தார். இப்போதும் ஜெனீவாவில் கூட்டத்தொடர் ஆரம்பமாவதற்கு முன்னரே அங்கு சென்றிருந்த கூட்டமைப்பின் சுமந்திரன் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கூட்டமைப்பின் நிலைப்பாடுகளை விளக்கியிருந்தார். இந்தப் பின்னணியிலேயே அமெரிக்கா இந்த ஆண்டும் புதிய பிரேரணை ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றது. வழக்கம்போல புலம்பெயர் தமிழர் தரப்புகள் அந்த தீர்மானத்தின் மீது அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டிருக்க, கூட்டமைப்பு அதனை வரவேற்றிருக்கின்றது. நடந்து முடிந்த யுத்தத்தில் மிக மோசமான மனித உரிமை மீறல்களைச் செய்த எழிலனின் மனைவியை எமது பிரதிநிதியாக தெரிவுசெய்த ஒரு சமூகம்- அந்த யுத்தத்தை வெற்றிகரமாக நடாத்திமுடித்த இராணுவத்தின் தளபதியை இந்த நாட்டின் ஜனாதிபதியாக நியமிக்க விரும்பி அவருக்கு வாக்களித்த ஒரு சமூகம்- யுத்தக் குற்றங்கள் குறித்து பேசுவதற்கு அருகதையற்றது என்பதை சுமந்திரன் போன்ற சட்டவாதிகள் உணர்ந்திருப்பதையே உணர முடிகின்றது.

# இலங்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை

## கர்தினால் மல்கம் ரஞ்சித் கருத்து



இலங்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வெளிநாடுகளின் தலையீடு அவசியமில்லை என அதி வணக்கத்திற்குரிய கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

தாய்நாட்டை மீளக் கட்டியெழுப்புதல், பாதுகாத்தல் மற்றும் வளர்ச்சியடையச் செய்தல் அனைவரினதும் கடமையாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நாடுகள் இலங்கை மனித உரிமை தொடர்பில் சர்வதேச விசாரணைகளை கோரி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் எந்தவொரு பிரஜையாவது உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளிநாட்டுக்கோ அல்லது வெளிநாட்டுப் பிரச்சினைகளை உள்நாட்டுக்கே எடுத்துச் செல்லவோ கொண்டுவரவோ முயற்சிக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான முனைப்புக்களின் மூலம் வெற்றியாளர்கள் எவரும் இருக்கப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இறைமையுடைய நாடு ஒன்றின் மீது சர்வதேச விசாரணைகள் மூலம் தலையிட்டு செய்வதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். சுயாதீனமான நாடு ஒன்றின் மீது சர்வதேச சமூகம் பலவந்தமான முறையில் தலையிட்டு செய்யக் கூடாது என மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

### இந்திய வெளிவிவகார செயலர் கொழும்பு வருகிறார்

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுஜாதா சிங் இம்மாத நடுப பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாக நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

அவர் தனது விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# குற்றச் செயல்களுக்கு தண்டனை: பொறிமுறைக்கு ஐரோப்பா வலியுறுத்து!

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கும் பொறிமுறைமை முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

கடந்த காலம் பற்றிய முழு உண்மைகளையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது என அது மேலும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 25ம் அமர்வில் பங்கேற்ற ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதியும், கிரேக்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான டிமிட்ரிஸ் கொவுகொவுலாஸ் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரே வழி குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தலாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகளின் பின்னர் இலங்கையுடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

கடந்த கால குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பதற்கு இரு தரப்பு பேச்சுவார்த்தைகள் சிறந்த களத்தை உருவாக்கும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

# தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக சேவை!

## இந்தியா மீண்டும் உறுதி!!

தமிழ் மக்களுக்காக தொடர்ச்சியாக சேவையாற்றப்படும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார். வடக்கு தமிழர்களின் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி தேவைகளை பூர்த்தி செய்வதில் இந்தியா கூடுதல் முனைப்பு காட்டி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கில் பாடசாலைகள், வீடுகள் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை இந்தியா முன்னெடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். தமிழ் மக்களின் நலன்புரிக்காக இந்தியா அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13ம் திருத்தச் சட்டத்தையும், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை பரிந்துரைகளையும் அமுல்படுத்த வேண்டுமென இந்தியா கோரி வருகிறது.

தமிழ் மக்களின் நலன்களை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே இந்திய பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Lanka wins the Asia Cup 2014!!

By Tharany Rajasingham
Stockholm, 09 March,

Sri Lanka won by 5 wickets against Pakistan in the final match of Asia Cup 2014 breaking Sri Lanka's dry spell in winning the title in Asia Cup since 2008. Lasith Malinga's (5-56) three quick dismissals of the top order batsmenHaving won the toss Pakistan elected to bat. Pakistan's hopes of heaping runs on the scoreboard seemed to have crumbled with Lasith Malinga's (5-56) three quick dismissals of the top order batsmen Sharjeel Khan (8) Ahmed Shehzad (5) and Mohammad Hafeez (3). The defending champions' scoreboard was in trouble having lost three early wickets with just 18 runs on the board.

The star of Pakistan's batting side in the final was Fawad Alam (114) whose maiden century helped the side put up a decent total. Misbah-ul-Haq (65) and Fawad's 122 runs fourth wicket partnership combined with Umar Akmal (59) and Fawad's 115 runs fifth wicket partnership with Fawad playing a sensible anchor role helped put 260 runs as a target for Sri Lanka to chase.




Sri Lankan bowlers were struggling to take wickets after the first three dismissals and the fielding today was not up to their usual standard. It was Malinga who struck again with two more wickets of Akmal and Pakistan's skipper.

Chasing a total of 261 runs in order to win the Asia cup, Sri Lankan opening pair built a steady platform with Kusal Perera (42) taking the driver's seat while Lahiru Thirimanne (101) held back. Said Ajmal (3-26) dismissed Perera who was stumped by Akmal when Perera came charging down the pitch looking to hammer the ball behind the ropes. Kumar Sanagakkara (0) went out on the first ball his faced with the Sri Lankan scoreboard 2 for 56 in 10.2 over.

**Sri Lanka 261/5 (Thirimanne 101, Jayawardene 75, Ajmal 3-26) defeat Pakistan 260/5 (Fawad 114*, Misbah 65, U Akmal 59, Malinga 5-56) by five wickets**

Thirimanne made his third ODI century two of which were made during the Asia Cup 2014 trophy.

The third wicket partnership of 156 runs between Mahela Jayawardne (75) and Thirimanne allowed Sri Lanka to comfortably close in on their target. Jayawardne had been struggling throughout this tournament and it seemed that he was struggling in his earlier overs he pulled out a classic knock once again in a series final keeping the scoreboard ticking. Pakistan failed to take wickets at regular intervals and their fielding was sloppy with couple of easy catches dropped by fielders and misfielding.

Overall Sri Lanka has shown that they were the stronger contender and the most in form side in this series. Sri Lanka under the captaincy of Angelo Mathews (16*) and a team of young players performed brilliantly setting a strong platform for them in the T20 World cup which will be commencing March 16.


Malinga won the "player of the match" while Thirimanne was awarded "player of the series."

Interestingly history repeated itself at the final match as Malinga took a five wicket haul and Thirimanne scored a century in their first match of the Asia Cup and Malinga took yet another 5-fer and Thirimanne made his second series century. The duo closed the series with a touch of poetic finish.

Congratulations to Sri Lanka for bringing home Asia cup after six years!!

courtesy:(Asiantribune.com):

# New outer circular highway opens





The first phase of the Outer Circular Highway (OCH) from Kottawa to Kaduwela was declared open by President Mahinda Rajapaksa today.

The 11 km Kottawa – Kaduwela section of the OCH has been constructed at a cost of Rs. 27 billion with financial assistance from Japan.

This highway provides an orbital beltway to bypass the city of Colombo and reduce traffic congestion in the Western Province, and encourage the development of highly populated urban areas in the Western Province.

Ports, Highways and Shipping Project Minister Nirmala Kothalawala said the objective of the OCH is to connect the Southern Expressway, the Katunayake – Colombo Expressway and Colombo – Kandy or Colombo-Northern Expressway enabling motorists using these roads to bypass Colombo to reach their destinations. The OCH would provide alternative means for the public to reach their destinations without having to travel to Colombo, which can be time-consuming for motorists.

At Kottawa, Makumbura, the OCH will be connected to the Southern Expressway and also to the Colombo – Avissawella-Ratnapura-Badulla-Wellawaya A-4 road known as High Level Road.

"The section has been developed as a four -lane highway in the initial stage and the design speed is 100 kmph. "A 3.3 km long viaduct has been elevated to bypass marshy areas or water retention areas in Mahawewa between Kottawa and Kaduwela," he added. This is Sri Lanka's longest bridge and flyover located on the Kottawa-Kaduwela section.

The construction of the OCH was carried out in three phases – Kottawa-Kaduwela, Kaduwela-Kadawatha and Kadawatha-Kerawalapitiya. The first section from Kottawa, to Kaduwela was initiated in December 2009 and work on the second part of the highway from Kaduwela to Kadawatha is progressing at a rapid pace.

Eighty percent of the construction work of the second phase too has been completed. Construction work on the third phase of the OCH from Kadawata to Kerawalapitiya will commence shortly.

"We are planning to complete the second section by 2015 and the third section by the end of 2016," the minister added.

Courtesy:Colombo Gazette



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்று வீசப்பட்ட ஈழத்து பெண் ஆளுமைகள்

மட்டுநகரிலிருந்து
எழுகதிரோன்

சர்வதேச பெண்கள் தினத்தில் ஈழம் இழந்துபோன பெண் ஆளுமைகள் பற்றிய சில நினைவுகள் வந்து செல்கின்றன. அவர்களில் ராஜனி திரணகம, செல்வி, சிவரமணி, சரோஜினி யோகேஸ்வரன், மகேஸ்வரி வேலாயுதம் ரேலங்கி செல்வராஜா..... ...... என்று நீண்டதொரு பட்டியலுக்கு நாம் சொந்தகாரர்களாயுள்ளோம். இந்த இழப்புகள் இயற்கையில் வந்தவையல்ல. தவிர்த்திருக்க முடியாதவையுமல்ல. ஆனால் கடந்த காலத்தில் இலங்கையில் கோலோச்சிய வன்முறை சூழலும் அதன் மீதான கண்மூடித்தனமான வழிபாட்டு கலாச்சாரமுமே நாம் இழந்துபோன இந்த ஆளுமைகளை தீர்த்து கட்டியிருந்தது. இன்று பெண்களை பாதுகாப்போம், பெண்களை மீட்டெடுப்போம், பெண்களுக்கு சுதந்திரம் வழங்குவோம் என்று நாம் ஒவ்வொருவரும் கோசங்களை உச்சரித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் எம்மால் பல பெண் ஆளுமைகளின் இருப்புகளை கடந்த காலங்களில் காப்பாற்ற முடியவில்லை. எமது சமூகத்தை வழிநடத்தும் மிகப்பெரும் திறமைகளை தன்னகத்தே கொண்டிருந்த அந்த பெண்களை இன்று நாம் இழந்து நிற்கின்றோம். அதன் பிரதிபலனானாகவே எமது பெண்சமூகம் இன்று மீளமுடியாத அகலபாதாலத்துக்கு சென்று கொண்டிருக்கிறது எனலாம்.

## ராஜினி திரணகம



இலங்கையில் எழுத்துக்காக கொல்லப்பட்ட முதல் பெண். யாழ்ப்பாண பல்கலை கழகத்தின் உடல்கூற்றியல் விரிவுரையாளராக கடமை யாற்றியவர். சமூகம் சார் சிந்தனையை மாணவர்களிடையே உருவாக்க வேண்டுமென்பதில் தீராது அக்கறையுடன் செயல்பட்டவர். அவர் பற்றி அவரது மாணவனொருவர் பின்வருமாறு எழுதுகிறார்.

"அவர் வெறும் உடற்கூற்றியல் விரிவுரையாளராக மட்டும் இருக்கவில்லை. அவரின் வகுப்புகள் எப்போதும் மிக உற்சாகம் நிறைந்ததாகவே இருக்கும். தனது அன்றாட விரிவுரைகளுக்கு அப்பால் எமது சமூகப் பிரைச்சினைகளைப் பற்றி சிந்திக்கும் திசையிலும் மாணவர்களை மிகத் திறமையாக அவர் எடுத்து செல்வார். அப்போது அவரின் பரந்த அறிவையும் ஆழமான சமூக உணர்வையும் நாம் கண்டோம். எமக்கு அவற்றை புரிய வைப்பதற்காக சிறந்த திரைப்படங்கள்இ நாவல்கள் அவர் படித்து ரசித்த கவிதைகள் பலரின் உலக அனுபவங்கள் என சகலவற்றையும் எந்தவித தடங்கலும் இன்றி மள மளவென எம்முன் எடுத்துச் சொல்வார்".

தமிழீழ விடுதலைபோராட்டத்தின் தோல்வியை முன்னறிவித்த "முறிந்த பனை" என்னும் வரலாற்றுதொகுப்பின் ஆசிரியர்களில் ஒருவராக பணியாற்றியவர். புலிகளின் உளவுப்பிரிவில் பணியாற்றிய வரும் கொலையாளியுமான பொஸ்கோ என்பவனின் கரங்களால் 1989 செப்டெம்பர் 21ம் திகதியன்றுஇயாழ் பல்கலைகழக வளாகத்தில் 2வது எம்.பி.பி.எஸ் பரீட்சையின் இறுதி அங்கம் முடிவடைந்து வெளியே வரும் போது சுட்டுகொல்லபட்டார். அவரை சைக்கிளில் பின் தொடர்ந்த கொலையாளி அவரது தலையின் வலப்பக்கத்தில் முதல் வேட்டைத் தீர்த்தான். பின்னர் அவர் கீழே விழுந்ததும் இன்னும் இரண்டு தடைவைகள் அவர் தலையில் சுட்டுவிட்டுச் சென்றான். கொல்லப்பட்ட மறுதினம் அவரின் உடல் மருத்துவ பீடத்திற்கு கொண்டு வரப்பட்ட பொழுது யாழ். பல்கலைக்கழகத்தின் பல மூத்த விரிவுரையாளர்கள் அங்கு சமூகமளிக்கவில்லை. ஏன்..? காரணம் அவர்களுக்கும் இக்கொலையை செய்தவர்கள் யார் என்று நன்றாக தெரியும். ஆனால் அனைவரும் மௌனம் காத்தனர்.

## கவிஞை செல்வி

பெண்ணியவாதியான இவர் யாழ்ப்பாண பல்கலை கழகத்தின் நாடகமும் அரங்கியலும் எனும் துறையின் இறுதியாண்டு மாணவி. தோழி இதழின் ஆசிரியராக இயங்கியவர். தனது கல்வி செயற்பாடுகளுக்கு அப்பால் சமூகம் சார்ந்து தீராது உழைத்தவர். யாழ்ப்பாண பெண்கள் ஆய்வுவட்டம், பூரணி பெண்கள் நிலையம் என்று பலவிதத்திலும் பெண்களின் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டவர். .1991ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் புலிகளால் கடத்தப்பட்ட இவரை விடுவிக்க கோரிசர்வதேச மனித உரிமை அமைப்பு பலவாறு முயன்றது. தனது இதழான குழஉரள செல்வியைப் பற்றி 1994ம் ஆண்டு மார்ச் இதழில் விடுதலையைக் கோரி எழுதியது. புலிகள் எதற்கும் செவி சாய்க்கவில்லை. இந்த இக்கட்டான காலகட்டத்தில்தான் உலகப் புகழ்பெற்ற 'Poetry International Award' கவிதைக்கான சர்வதேச விருது (Poets Essayists and Novelists) PEN அமைப்பினால் செல்விக்கு வழங்கப்பட்டது. . இவ் விருதானது தங்களுடைய நம்பிக்கைகளுக்காகவும் இலட்சியத் திற்காகவும் எழுத்துத தளத்திலும் கலைத் தளத்திலும் படைப்புக்களை உருவாக்கி யவர்களுக்கு வழங்கப்படுவதாகும். செல்வி ஈழத்தின் நெருக்கடியான போராட்ட வழ்நிலையில் இத்துறைகளில் சேவை புரிந்தமைக்காக இவ்விருது வழங்க ப்பட்டது. இவரை புலிகள் இறுதிவரை விடுதலை செய்ய வேயில்லை.



## சரோஜினி யோகேஸ்வரன்

1997 ஆம் ஆண்டில் இவர் யாழ்ப்பாண நகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.



சரோஜினி இலங்கைத் தமிழ் அரசியல்வாதியும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரும்இ முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெ. யோகேஸ்வரனின் மனைவியும் ஆவார்.

திருமதி யோகேஸ்வரன் 1998 மே 17 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து புலிகளால் ஐந்து முறை துப்பாக்கியால் சுடப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படும் வழியில் மரணமானார். தமிழீழ விடுதலைப் புலிகள் இவரது கணவர் வெ. யோகேசுவரனை1987 ஆம் ஆண்டில் கொழும்பில் வைத்து சுட்டுக் கொன்றனர். இன்று யாழ்மாநகர சபையும் வட மாகாண சபையும் ஒரு ஜனநாயக சூழலுக்குள் இயங்குவதற்கு உரமாக தன்னுயிரை தந்தவர்.

## சிவரமணி

இவ்வுலகில் வாழமுடியாது தன்னைத் தானே மாய்த்துக்கொண்டவர். எமது தமிழ் சூழலின் ஆணாதிக்க வெறிகளும் வன்முறை கலாச்சாரமும் இவரது தற்கொலைக்கு காரணமாயின. 1991 மே மாதம் இவர் சிறுவயதில் இறந்து போனாலும் அவரது கவிதைகள் இன்றைய பெண்ணிய கவிதைகளின் மூலவேர்களாக இன்றுவரை ஜீவிக்கின்றன.

## மகேஸ்வரி வேலாயுதம்

1983 ன் பின்னர் இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டு இந்தியாவுக்கு ஓடிச்சென்ற



தமிழ் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக நின்று உதவிகரம் நீட்டியவர். அகதிகளின் வாழ்வில் ஓடியோடி பங்கெடுத்து அயராது உழைத்தவர். நமது முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஸ்ரீலங்கா அரசின் விசுவாசமான ஊழியனாய் உச்சநீதிமன்றில் இருந்துகொண்டு இருந்து எமது இளைஞர்களுக்கு ஐந்துவருடம் பத்து வருடம் என்று சிறைவாச சாபம் கொண்டிருந்த வேளைகளில் இலங்கை சிறைகளில் வாடிய ஆயிர கணக்கான தமிழ் அரசியல் கைதிகளுக்கு இலவச வழக்காடி அவர்களின் வாழ்வில் ஒளியே ற்றியவர். மனித உரிமை சட்டத்தரணியான 53வயதுடைய மகேஸ்வரி வேலாயுதம்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அமெரிக்க பிரேரணை": சதிவலை பின்னியது யார்?



முள்ளிவாய்க்காலில் ஈழவிடுதலைக்கான ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டபோது ஏற்பட்ட உணர்விற்கு அண்மித்த ஒரு வலியினை உலகத் தமிழினம் இன்று சந்தித்திருக்கிறது. ஜெனீவா கூட்டத் தொடர் சிங்களப் பேரினவாத அரசுக்கு மிகப் பெரும் சவாலாக அமையும் என்ற ஒரு எதிர்பார்ப்பு உலகெங்கிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் மனங்களில் சிறு நம்பிக்கை தருவதாக அமைந்திருந்தாலும் இறுதி நேரத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு மீண்டுமொரு அவகாசத்தைக் கொடுக்கும் ஒரு வரைபு அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டமை பலத்த ஏமாற்றத்தினை கொடுத்திருக்கிறது.

ஆனால் அமெரிக்கா அண்மையில் தெரிவித்து வந்த கருத்துக்களுக்கும் தற்போது முன்வைத்திருக்கின்ற வரைபுக்கும் இடையில் பலத்த முரண் நிலை காணப்படுவதற்கான பிரதான காரணம் என்ன என்பது தொடர்பிலான அதிர்ச்சி தரும் தகவல்கள் அம்பலமாகியிருக்கின்றன.

நம்ப முடியாத ஆனால் நம்பியே ஆகவேண்டிய ஒரு தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது. புலம் பெயர் தளத்தில் தமிழ் உணர்வாளர்கள் தமது அன்றாடக் கடமைகளை விட்டு விட்டு வீதி வீதியாக இறங்கி எமது இனத்தின் விடுதலைக்காக முடிந்தவரை தம்மை அர்ப்பணித்துப் போராடுகின்றார்கள்.

ஜெனீவாக் களம் தமிழினத்துக்கு நீதி பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையுடன் அந்த மக்கள் பனியிலும் மழையிலும் கடினமாய்ப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல மனித நேயத்தினை நேசிப்பவர்கள் ஈழத்தில் நிகழ்ந்தேறிய இனக்கொலைக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக மொழி, மதம் கடந்து உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனாலும் தமிழ் மக்கள் தமது தலைமைகளாக தெரிவு செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானிக்கும் சக்திகள் தமிழினத்தின் தலையில் மண்ணை அள்ளி வீசியிருக்கின்ற விடயங்கள் தற்போது அம்பலத்துக்கு வந்திருக்கின்றன.

அமெரிக்கா முன்வைத்த இலங்கை தொடர்பிலான வரைபில் போர்க்குற்றம் தொடர்பிலான சர்வதேச விசாரணை குறித்த எந்த வித வார்த்தைப் பிரயோகங்களும் இடம்பெறாமைக்கு கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அவருடைய பிரத்தியேக செயலாளரும் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான சுமந்திரனுமே காரணம் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கின்றது.

ஜெனீவாக் கூட்டத் தொடர் நெருங்கிவரும் நிலையில் கூட்டமைப்பு எதிர்பார்க்கும் விடயங்கள் என்ற சாரப்பட அமெரிக்காவிடம் கூட்டமைப்பின் பெயரால் அறிக்கை ஒன்று கையளிக்கப் பட்டுள்ளது. குறித்த அறிக்கையில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை என்ற விடயத்தினை பயன்படுத்த வேண்டாம் என அமெரிக்காவிடம் வலியுறுத்தப்பட்டிருப்பதாக தெரியவருகிறது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் மூலம் வெற்றி பெற்றிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தக் கோரிக்கையினை முன்வைத்திருப்பதால் அது தொடர்பில் அமெரிக்கா செவி சாய்த்திருப்பதாகவே தெரிகிறது.

கத்தோலிக்க மதகுருமார் மற்றும் இலங்கையின் 22 சிவில் சமூக அமைப்புக்கள் கூட சர்வதேச விசாரணை தொடர்பில் வலியுறுத்தி ஐ.நாவுக்கு கடிதங்களை அனுப்பியிருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதுவரையில் ஒரு கடிதத்தினையோ ஒரு அறிக்கை யினையோ ஐ.நாவிடமோ ஐ.நாவின் மனித உரிமைப் பேரவை உறுப்பு நாடுகளிடமோ முன்வைக்கவில்லை. ஆனாலும் கூட்டமைப்பினர் மேடைக்கு மேடை சர்வதேச போர்க்குற்ற விசாரணை தொடர்பிலான வலியுறுத்தல்களை மேற்கொண்டு வந்திருந்த போதிலும் உண்மையில் என்ன நடந்திருக்கின்றது என்பது கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கே நேற்றுத்தான் தெரியவே வந்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான திடீர் ஒன்று கூடல் ஒன்று கொழும்பில் 05.03-2014 பிற்பகல் நடைபெற்றிருந்தது. அந்தச் சந்திப்பில் அமெரிக்கா முன்வைத்துள்ள தீர்மானம் தொடர்பில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடுமையான அதிர்ப்தியினையும் கவலையினையும் வெளியிட்டிருக்கின்றனர்.

காணாமல் போனோர் தொடர்பில் விசாணை மேற்கொள்ளல், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வழிமுறைகள், நில அபகரிப்பு உட்பட்ட போரால் மிகவும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று எதுவும் குறிப்பிடப்படாத நிலையில் வெலவெரியாவில் இராணுவத்தினரின் தாக்குதலில் சிங்களவர்கள் மூவர் கொல்லப்பட்டமை, வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டமைக்கு பாராட்டு மற்றும் அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து வரவேற்பு தெரிவிக்கப்பட்டிருக்கின்றமை உட்பட்ட அரசாங்கத்திற்கு சாதகமான விடய்ங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளனவே தவிர அரசாங்கத்துக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி அதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை ஏற்படுத்தும் எந்தவித சரத்துக்களும் குறித்த பிரேரணையில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. இந்த விடயங்களை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக் காட்டியதுடன் இதன் மூலம் மீண்டுமொரு கால அவகாசம் வழங்கப்படுவதால் தமிழர் தாயகம் எதிர்நோக்கவுள்ள நெருக்கடிகள் குறித்தும் விவாதித்திருந்தனர்.

இதனிடையே அமெரிக்கா தீர்மானம் கொண்டுவந்திருந்தாலும் கூட்டமைப்பினராகிய நாம் இது தொடர்பில் என்ன செய்தோம்? என்ற கேள்வியை கூட்டமைப்பு உறுப்பிர்கள் எழுப்பிய போது, பதிலளித்த சம்பந்தன், இது தொடர்பில் சர்வதேச பிரதிநிதிகளிடம் வலியுறுத்தி வருகிறோம் என்று தெரிவித்திருக்கின்றார். இந்த நிலையில் குறுக்கிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமெரிக்காவிடம் கூட்டமைப்பினால் ஒரு தீர்மான வரைபு கையளிக்கப்பட்டதாக தெரிய வந்திருக்கிறது. அதில் குறிப்பிட்ட விடயம் தொடர்பில் தெளிவுறுத்துமாறும் அறிக்கையின் பிரதியினை தமக்கு காட்டுமாறும் கோரியிருக்கின்றனர். இறுதிவரையில் அதனை காட்டுவதற்கோ, அதில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து வாய் திறப்பதற்கோ சம்பந்தன் மறுத்திருக்கின்றார். கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராஜா, சுரேஷ் பிறேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் உட்பட்ட எவருக்கும் அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்ட மனுவில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது? என்பதற்கு பதில் வழங்கப்படவில்லை.

ஆக, சுமந்திரனும் சம்பந்தனும் இணைந்து தயாரித்த ஒரு அறிக்கை அமெரிக்காவிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது என்பது மட்டுமே நேற்றைய (05.03.2014) கூட்டத்தில் நிரூபணமாகியிருக்கின்றது.

இதனிடையே அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையில் திருத்தம் மேற்கொள்ளுமாறு கூட்டமைப்பின் சார்பில் ஒரு மனுவினைக் கையளிப்போம் என்று கூட்டமைப்பு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தபோது முற்றாக மறுத்துரைத்த சம்பந்தன், அடுத்த தீர்மானத்தின் பின்னர் அது குறித்து பரிசீலிக்கலாம் என உறுதியாகத் தெரிவித்ததாக தெரியவந்திருக்கின்றது.

பல மாதங்களுக்கு முன்னரே போர்க்குற்றம் தொடர்பிலான சர்வதேச விசாரணைக்கு எதிரான நிலைப்பாட்டினை சுமந்திரன் எடுத்துவிட்டிருந்ததாக தற்போது அறிய முடிகிறது, அவர் தனது கருத்துக்கு துணையாக இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதரை குறிப்பிட்டு, போர்க்குற்ற விசாரணையை வலியுறுத்துவது மஹிந்த அரசு தமிழ் மக்களுக்கு தீர்வு வழங்கும் நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கச் செய்துவிடும் என்பதால் அதனைக் கைவிடவேண்டும் என்று தென்னாபிரிக்கத் தூதர் தன்னிடம் வலியுறுத்தியதாகவும் அந்த முடிவினை ஏற்கவேண்டும் என்று சக நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் அழுத்ததிற்கு உட்படுத்தியதாவும் உறுதிப்ப டுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆக, அமெரிக்காவிடம் சம்ந்தன் - சுமந்திரன் கையளித்த பிரேரணையில் சர்வதேச விசாரணையை கைவிடவேண்டும் என்பதே வலியுறுத்தப்பட்டிருப்பதாக நம்ப முடிகிறது.

இதேவேளை கூட்டமைப்பின் சார்பில் சுமந்திரன் - சம்பந்தன் கொடுத்த பிரேரணையை கவனத்தில் எடுத்துக் கொண்டு அமெரிக்கா தன்னுடைய நடவடிக்கையினை முன்னெடுக்குமா? என்ற கேள்வி கூட எழலாம். சர்வதேசத்தினைப் பொறுத்தவரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகோபித்த தெரிவு என்ற விடயம் மட்டுமே முன்னுக்குத் தெரியும் என்பதால் கூட்டமைப்பின் பெயரால் கையளி க்கப்பட்ட அறிக்கையினை சர்வதேசம் தமிழ் மக்களின் குரலாகவே பார்த்திரு க்கலாம். அதனால் அவ்வாறான ஒரு முடிவினை நோக்கி அமெரிக்கா நகர்ந்திரு க்கலாம் என்றும் கருதலாம்.

இதனிடையே, 05.03.2014 கூட்டத்தில் சுமந்திரன் பங்குகொள்ளாத நிலையில் சம்பந்தன் தவிர செல்வராசா தொடக்கம் சிறிதரன் வரையில் போர்க் குற்றவிசாரணைக்கான முன்மொழிவு இடம் பெற்றிருக்காத பிரேரணை தொடர்பில் விசனம் வெளியிட்டிருந்த நிலையில், அன்றிரவே, சம்பந்தன் மற்றொரு

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறிலங்கா: இனம்சார் தமிழ் சிங்கள சமூகங்களும் மதம் சார் ஒத்த பண்புகளும்!!

சிறிலங்காவின் பெரும்பான்மை சமூகமான சிங்கள மொழியைப் பேசுகின்ற பௌத்தர்கள் தமது கடவுளைப் பத்தினி என அழைக்கிறார்கள். இதேவேளையில் இங்கு வாழும் சிறுபான்மைத் தமிழ் இந்துக்கள் அதே பத்தினித் தெய்வத்தை கண்ணகி என அழைக்கின்றனர்.

இவ்வாறு பிரித்தானியாவை தளமாகக் கொண்ட The Economist சஞ்சிகை வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் முழுவிபரமாவது:

மிகவும் கசப்பான உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகள் ஆகின்ற நிலையில், சிறிலங்காவில் பிளவுபட்ட இனங்களுக கிடையில் மீளிணக்கப்பாடு ஏற்படுத்தப்படவில்லை. சிறிலங்காவில் வாழும் சிங்கள மற்றும் தமிழ் இனங்களுக்கிடையில் பிளவுகள் உள்ளபோதிலும் இவர்கள் வணங்குகின்ற கடவுள்கள் ஒரேவிதமாக இருப்பதாக ஒளிப்பதிவாளர் சார்னி ஜெயவர்த்தன மற்றும் மானுடவியலாளர்





மாலதி டீ அல்விஸ் ஆகியோர் ஆராய்கின்றனர்.

சிறிலங்காவின் பெரும்பான்மை சமூகமான சிங்கள மொழியைப் பேசுகின்ற பௌத்தர்கள் தமது கடவுளைப் பத்தினி என அழைக்கிறார்கள். இதேவேளையில் இங்கு வாழும் சிறுபான்மைத் தமிழ் இந்துக்கள் அதே பத்தினித் தெய்வத்தை கண்ணகி என அழைக்கின்றனர். தாங்கள் ஒரே தெய்வத்தை வெவ்வேறு பெயர்களில் வணங்குகிறோம் என்பதை சிறிலங்காவில் வாழும் தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் அறிந்திருக்கவில்லை. இவர்கள் தமது மதங்கள் தொடர்பில் ஆழமான தெளிவைக் கொண்டுள்ளதாக நம்புகின்றனர். இவர்கள் தமது மத வரலாறுகள் மற்றும் பாரம்பரியங்களை எடுத்துக் கூறுகின்ற போதிலும் பௌத்த மற்றும் இந்துக்களின் மத சார் வழக்காறுகள் அதிகம் ஒத்ததாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான ஒத்த வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சிங்கள மற்றும் தமிழ் சமூகங்கள் தமக்கிடையே மீளிணக்கப்பாட்டை மேற்கொள்ள முடியும் என்பது சார்ணி ஜெயவர்த்தன மற்றும் மாலதி டீ அல்விஸ் ஆகியோரின் வாதமாகும். இவ்விருவரும் இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிறிலங்கா முழுவதும் பயணம் செய்ததுடன் பெண் தெய்வ வழிபாடு, ஆலயங்கள், மதச் சடங்குகள் மற்றும் மதவழிமுறைகள் தொடர்பாக ஆராய்ந்து ஒளிப்படங்களை எடுத்துள்ளனர்.

தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களு க்கிடையில்

**The Economist**
மொழியாக்கம்
**நித்தியபாரதி.**

மத சார் ஒற்றுமைப் பண்புகள் மட்டுமன்றி பல்வேறு வகையான ஒத்த பண்புகள் காணப்படுவதாக இவர்கள் எடுத்த ஒளிப்படத் தொகுப்பின் மூலம் அறியமுடிகிறது. சிறிலங்காவின் வர்த்தகத் தலைநகரான கொழும்பில் ஒளிப்பதிவாளர் சார்னி ஜெயவர்த்தன மற்றும் மானுடவியலாளர் மாலதி டீ அல்விஸ் ஆகியோர் சேகரித்த ஒளிப்படப் பதிவுகள் இரண்டு நாட்கள் வரை கண்காட்சிக்காக வைக்கப்பட்டன. இதேபோன்று இந்த ஒளிப்படங்கள் தமிழ்மக்கள் அதிகம் வாழும் யாழ்ப்பாணத்திலும் பெரும் பாலான தமிழர்களும் முஸ்லீம்களும் வாழ்கின்ற மட்டக்களப்பிலும் வைக்கப் பட்டுள்ளன.

பத்தினி என்கின்ற பௌத்தர்கள் வணங்கும் பெண்தெய்வம் மற்றும் கண்ணகி என்கின்ற இந்துக்களின் பெண்தெய்வம் ஆகிய இரண்டும் ஒன்று என்பதை இந்தக் கண்காட்சியில் தெளிவுபடுத்தப்படுகிறது.

பல பத்தாண்டுகளாக சிறிலங்காவில் நிலவும் இனமுரண்பாட்டைக் களைவ தற்கான ஒரு வழியாக இந்த மதம் சார் ஒத்த பண்புகள் இருக்கலாம் என்பது இவ்விரு படைப்பாளிகளின் நம்பிக்கையாகும். ஆனால் இவ்விரு படைப்பாளிகளும் மேலும் தமது பணி மூலம் பிளவுபட்டுள்ள சமூகங்களை இணைப்பதற்கான முயற்சி களை மேற்கொள்கின்றனர்.

கிளர்ச்சிகள் இடம்பெற்ற, பல ஆயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்ட, காணாமற்போன மற்றும் காயமடைவதற்குக் காரணமான யுத்தம் நீண்டகாலமாக நீடித்த சிறிலங்கா போன்ற ஒரு நாட்டில் மத வழிபாடு என்பதும் ஒரு கவலைக்குரிய விடயமாகவே இருந்திருக்கும். தான் செய்யாத ஒரு குற்றத்திற்காக படுகொலை செய்யப்பட்ட கணவன் ஒருவரின் நீதிமிக்க மனைவியாக பத்தினி அல்லது கண்ணகி சித்தரிக்கப்படுகிறார்.

கண்ணகி அல்லது பத்தினி என்கின்ற தெய்வத்தை போரில் காணாமற் போனவர்களின் படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் தமது இருகரங்களையும் சேர்த்து வணங்குகின்றனர். இங்கு சிங்களவர்களும் தமிழர்களும் தமது உறவுகளுக்காக இந்தப் பெண் தெய்வத்தை வணங்குகிறார்கள் என்பது மிக முக்கியமானதாகும்.

காணாமற் போன தமது உறவுகள் மீண்டும் தம்மிடம் திரும்பி வருவார்கள் என மக்கள் நம்புகின்றனர். இந்த உறவுகளை மாலதி டீ அல்விஸ் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். காணாமற் போனவர்களின் உறவுகளில் தமிழர்களும் சிங்களவர்களும் உள்ளனர். 1970 மற்றும் 80 களில் இடம்பெற்ற மார்க்சியக் கிளர்ச்சிகளின் போது சிங்களவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டும் காணாமற் போயுமுள்ளனர். இந்தச் சிங்கள உறவுகளையும் மாலதி டீ அல்விஸ் சந்தித்துள்ளார்.

போரின் போது கணவனை இழந்த மற்றும் குடும்பங்களைத் தலைமை தாங்கும் பெரும் பாலான பெண்களின் நம்பிக்கையின் சின்னமாக பத்தினி அல்லது கண்ணகி உள்ளார். தனது கணவன் நீதியற்ற முறையில் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிராக நீதி தேடும் பெண்ணின் கதையும் இந்தப் பெண்தெய்வம் மீதான நம்பிக் கையும் ஒன்றாகும்.

இதேபோன்று ஆண்களும் கண்ணகியை வணங்குகின்றனர். தனது ஒரேயொரு மகள் தமிழ்ப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட தந்தை ஒருவரை மட்டக்களப்பில் டீ அல்விஸ் சந்தித்தார். இந்தத் தந்தை மன ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தார். இவரால் பேசவும் முடியாதளவு நோயாளி ஆனார். இவரை சின்னமுத்து என்கின்ற நோய் தாக்கியது. 2004ல் ஆழிப்பேரலை இடம்பெற்ற போது இவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இவரது தாய் மற்றும் மகள் ஆகியோர் இதில் காவு கொள்ளப்பட்டனர். தனது கனவில் கண்ணகித் தெய்வம் வந்ததாகவும் இவரது துன்பங்கள் மறைவதற்கான காலம் வந்துவிட்டது எனவும் கூறியதாகவும் மட்டக்களப்பைச் சேர்ந்த தந்தை குறிப்பிட்டார். இவர் தற்போது தனது கிராம த்தில் கண்ணகிக்கு ஆலயம் அமைப பதற்கான குழுவில் அங்கம் வகிக்கிறார்.

உள்நாட்டுப் போர் இடம்பெற்றபோது கிழக்கில் இருந்த கண்ணகி ஆலயங்கள் பல சிறிலங்காப் படைகளால் அழிக்கப்பட்டன. இதேபோன்று கண்ணகிக்கு ஆண்டுதோறும் விழாக்கள் எடுப்பதற்காக தமிழர்கள் பெருமளவில் ஒன்றுகூடியபோது தமிழ்ப் புலிகள் சிறுவர்களைப் படைக்கு இணைத் தனர். போர் இடம்பெற்ற போது மக்கள் கண்ணகி ஆலயங்களில் தஞ்சம் புகுந்தனர்.

சிறிலங்காவில் சிங்களவர்களும் தமிழரகளும் ஒன்றாக வாழும் சில இடங்களில் பத்தினி அல்லது கண்ணகிக்கு பொதுவாக



விழா எடுக்கிறார்கள். கிழக்குக் கரையோரத்தில் பாணம என்ற இடத்தில்

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரன் எம்.பி. மீது ஆனந்தி கடும் தாக்கு

தமிழ தேசியக்கூட்டமைப்பு சார்பில் ஜெனீவாவிற்கு அனுப்பப்பட்ட தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் எந்தவொரு சந்திப்பிலும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை தொடர்பில் கோரிக்கைகளை முன்வைக்கவில்லை. என்னையும் எதும் பேச அனுமதிக்கவில்லை என வடமாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.



யாழ்,ஊடக அமையத்தில் (06.03.14) நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களது கேள்விகளிற்கு பதிலளிக்கையிலேயே அவர் இந்;தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

வடமாகாணசபையில் சர்வதேச போர்க்குற்ற விசாரணை வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அங்கு வடமாகாணசபை சார்பில் என்னையே ஜெனிவாவிற்கு அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டிருந்தது. இவ்வகையினில் தமிழரசுக்கட்சியின் அனுசரணையுடன் நான் பல்வேறு சிரமங்களிற்கு மத்தியில் ஜெனீவா சென்றிருந்தேன்.


அங்கு சென்று இறங்கியதுமே தேசியப்பட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் நான் விடுதலைப்புலிகளது முக்கிய போராளியான எழிலனின் மனைவி என்பதால் என்னையும் சர்வதேச பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் போராளியாகவே பார்ப்பார்களென தெரிவித்ததுடன் என்னை ஏதும் பேச வேண்டாமெனவும் தானே எல்லாவற்றினையும் பேசுவதாகவும் தெரிவித்திருந்தார்.

இவ்வாறு ஒரு நிகழ்ச்சி நிரலில் அவர் என்னை அங்கு அழைத்து சென்றிருப்பார் என முன்கூட்டியே தெரிந்திருந்தால் நான் நிச்சயமாக அங்கு சென்றிருக்க மாட்டேன் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஜப்பானிய தூதுவருடன் அபிவிருத்தி பற்றியேபேசினேன்

## முதலமைச்சர் விக்கினேஸ்வரன் விளக்கம்

யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜப்பானிய தூதுவரிடம் அரசியலை விடுத்து, அபிவிருத்தி பற்றியே தாம் பேச்சு நடத்தியதாக வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



'வடமாகாண சபையைப் பொறுத்தமட்டில், அரசியலைவிட, அபிவிருத்தியே இப்போது முக்கியமாக இருக்கின்றது. ஆகவே, அபிவிருத்தி தொடர்பான விடயங்களையே நாங்கள் பேசினோம்" என்று வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன், கடந்த வாரம் திங்களன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவருடனான சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் நொபுஹிட்டோ ஹோபோ, வடமாகாண ஆளுனர், வடமாகாண முதலமைச்சர் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியிருக்கின்றார். முல்லைத்தீவுக்கும் அவர் விஜயம் செய்தார்.

ஜயிக்கா என்ற ஜப்பானிய நிறுவனத்தின் ஊடாக ஜப்பான் அரசு போரினால் பாதிக்கப்பட்டுள்ள வடபகுதி மக்களின் வாழ்வாதாரம் உள்ளிட்ட பல பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு பேச்சுக்கு முன்னர் மீனவர் விடுதலை இல்லை!

கொழும்பில் நடைபெற உள்ள இரண்டாம் கட்ட மீனவ பேச்சுவார்த்தைக்கு முன்னர் இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்படமாட்டார்கள் என இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.



தமிழக -இலங்கை இருநாட்டு மீனவர்களின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தை கொழும்பில் மார்ச் 13 அன்று நடைபெற உள்ளது.

கொழும்பில் நடைபெற உள்ள மீனவப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் இலங்கை கடற்படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட 177 தமிழக மீனவர்களும் அவர்களின் படகுகளும் விடுவிக்கப்பட வேண்டும் என தமிழக முதல்வர் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால் இந்த கோரிக்கையை இலங்கை அரசு ஏற்க மறுத்துவிட்டது.

இதுகுறித்து இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன வியாழக்கிழமை வவுனியாவில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

'சென்னையில் ஜனவரி 27 அன்று நடைபெற்ற இருநாட்டு மீனவப் பேச்சுவார்த்தைகளின்போது இந்திய மீனவர்கள் ஒரு மாத காலத்திற்க எல்லை தாண்டி இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிக்க வரமாட்டோம் என்று உறுதியளித்திருந்தார்கள். ஆனால் கொடுத்த உறுதிமொழியை மீறி எல்லை தாண்டி வந்தவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். இது தொடர்பாக இலங்கை நீதிமன்றம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளும்.

தமிழக முதல்வர் கொழும்பு பேச்சுவார்த்தைக்கு முன்னர் மீனவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரியிருந்தார். ஆனால் அவ்வாறு மீனவர்கள் விடுவிக்கப்பட மாட்டார்கள் என்றார்.

# கமலுக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு

நெடுந்தீவு பிரதேச சபைத்தலைவர் ரெக்சியன் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வடமாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கந்தசாமி கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிமன்ற நீதவான் எஸ்.லெனின்குமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் வீட்டில் இருந்து வட்டுக்காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார். சம்பத்தினையடுத்து வடக்கு மாகாணசபையின் எதிர்க்கட்சித்தலைவர் கந்தசாமி கமலேந்திரன், ரெக்சியனின் மனைவி அனிதா மற்றும் முச்சக்கரவண்டி சாரதி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் படி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கொலை தொடர்பிலான வழக்கு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் நீதிபதி லெனின்குமார் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது விசாரணைகளை மேற்கொண்ட நீதிபதி பிரதான சந்தேகநபரான கமலேந்திரன் உள்ளிட்ட மூவரையும் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கை ராணுவத்திற்கு இந்தியா தொடர்ந்து பயிற்சி

இலங்கை ராணுவத்திற்கு இந்திய ராணுவம் தொடர்ந்து பயிற்சி அளிக்கும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனன் உறுதி அளித்துள்ளார்.

இந்தியா, இலங்கை, மாலத்தீவு ஆகிய 3 நாடுகள் இடையேயான கடல் வழி பாதுகாப்பு தொடர்பான மாநாடு டெல்லியில் கடந்த வாரம் (6) நடைபெற்றது. இதில் பங்கேற்ற இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபய ராஜபக்ச, இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர மேனனை சந்தித்துப் பேசினார்.

அப்போது இலங்கை ராணுவத்திற்கு இந்திய ராணுவம் தொடர்ந்து பயிற்சி அளிக்கும் என்ற உறுதியை அவர் கோத்தபய ராஜபக்சேவிடம் அளித்ததாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டு சிறை பிடித்து செல்லப்பட்டுள்ள நிலையில், தமிழக மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பான வழ்நிலை காணப்படுகிறது.


இந்நிலையில் கோத்தபய ராஜபக்சவின் இந்திய வருகை மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டு, அவருடன் சிவசங்கர மேனன் தனியாக பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய மீனவர்களை மனிதாபிமானத்துடன் நடத்துமாறு இந்தியப் பிரதமர் கோரிக்கை!

இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் நடாத்துமாறு அந்நாட்டு பிரதமர் மன்மோகன் சிங், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

மீனவர் பிரச்சினை தொடர்பில் மனிதாபிமான அடிப்படையில் நோக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மியன்மாரில் நடைபெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்ற இரு நாடுகளினதும் தலைவர்கள் சந்தித்து கொண்ட போது



இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. மீனவர் பிரச்சினையானது வாழ்வாதாரப் பிரச்சினை எனவும் இது தொடர்பில் மனிதாபிமான அடிப்படையில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் 32 இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தமை குறித்தும் மன்மோகன் சிங், ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் ஏழு மண்டேலாக்கள்

ஒரு நாளைக்கு 10 பத்திரிகைகள் படிக்கலாம்; மணிக்கொரு முறை இணை யத்தில் முக்கியச் செய்தித தளங்களைச் சுற்றி வரலாம்; 24 மணி நேர செய்தித் தொலைக் காட்சிகளை ஓட விட்டு வேலைக்கு நடுவே நிமிஷத்துக்கு நிமிஷம் எட்டிப் பார்க்கலாம். ஆனால் தமிழ் நாட்டின் அரிய செய்திகளை அளிப்பதில் சுவரொட்டிகளுக்கு ஈடுஇணை இல்லை. தமிழ்நாட்டுக்கு ஏழு மண்டேலாக்கள் கிடைத்த செய்தியும் சுவரொட்டிகள் மூலம்தான் கிடைத்தது. சென்னை, ராஜா அண்ணா மலைபுரத்தின் நீண்ட சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் சுவரொட்டிகள் மூலம்.

யார் இந்த ஏழு மண்டேலாக்கள்?

வேறு யாராக இருக்க முடியும்? ராஜீவ் கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு,




மரண தண்டனையிலிருந்து தப்பி, 23 வருஷ சிறைவாசத்திலிருந்து விடுபட ஏங்கிக்கொண்டிருக்கும் சாந்தன், முருகன், பேரறிவாளன், நளினி, ராபர்ட் ஃபயஸ், ரவிச்சந்திரன், ஜெயக்குமார் ஆகிய எழுவர்தான் அந்த ஏழு மண்டேலாக்கள். இவர்கள் எப்படி, எப்போது மண்டேலா ஆனார்கள் என்ற கேள்வி இங்கு பொரு த்தமற்றது. ஏனென்றால், மண்டேலா மறைந்த போது அவருக்கு அஞ்சலி செலுத்து கிறோம் என்ற பெயரில், 'இன்விக்டஸ்' படத்தில், மண்டேலாவாக நடித்த மார்கன் ஃப்ராமேன் படத்தைப் போட்டு அஞ்சலி செலுத்திய வரலாறு நம்முடையது. எனினும், மனித மேரி மாதாக்கள், வாழும் வள்ளுவர்கள், சமகால சே குவேராக்கள் வரிசையில் ஏழு மண்டேலாக்களையும் சேர்க்க முடியுமா?



> "என் தாய் - தந்தை கையால் சாப்பிடக் காத்திருக்கிறேன்" என்கிற அரித்ரா குரல் நமக்கு வலிக்கிறது.

தேசியத் தொலைக்காட்சிகளில், அர்னப் கோஸ்வாமிகளும் ராஜ்தீப் சர்தே சாய்களும் தமிழர்களை இன வெறியர்களாகச் சித்தரித்துக் கத்தும் போது, வேகமும் கோபமும் வரத்தான் செய்கிறது. ஆனால், நம் ஆட்கள் அடிக்கும் கூத்துகளை வெளியிலிருந்து பார்க்கும் ஒருவருக்கு வேறு எப்படித் தோன்றும்?

மனிதாபிமானமா, இன அரசியலா?


பஞ்சாபில் 1995-ல் அன்றைய முதல்வர் பியாந்த் சிங் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், மாற்று மனித வெடிகுண்டாக வந்தவர் பல்வந்த் சிங் ரோஜனா. பாப்பர் கால்ஸா இயக்கத்தைச் சேர்ந்தவர். இந்த வழக்கில் நீதிமன்றத்தில் தானாக முன்வந்து வாக்குமூலம் அளித்தவர். 2007-ல் சி.பி.ஐ. நீதிமன்றம் ரோஜனாவுக்கு மரண தண்டனை விதித்தபோது மேல முறையீட்டு வாய்ப்பை மறுத்தவர். ரோஜனாவுக்கு ஆதரவான சீக்கியர்களின் தொடர் போராட்டங்கள், பஞ்சாபின் செல்வாக்கு மிக்க அமைப்பான சிரோமணி குருத்வாரா பிரபந்தக் குழு தாக்கல் செய்த கருணை மனு, முதல்வர் பிரகாஷ் சிங் பாதலின் நேரடி முறையீடு ஆகியவற்றின் தொடர்ச்சியாக ரோஜனாவின் மரண தண்டனையை நிறுத்தி வைத்திருக்கிறது அரசு.

1993-ல் டெல்லியில் இளைஞர் காங்கிரஸ் தலைவர் மணீந்தர்ஜித் சிங் பிட்டா கொலை வழக்குக் குற்றவாளியான காலீஸ்தான் விடுதலைப் படையைச் சேர்ந்த புல்லரின் கதை ஒப்பீட்டளவில் இன்னும் நமக்கு நெருக்கமானது. 2001-ல் மரண தண்டனை விதிக்கப்பட்ட புல்லரின் கருணை மனுவை 10 ஆண்டுகளுக்குப் பின் நிராகரித்தார் குடியரசுத் தலைவர் பிரதிபா பாட்டீல். சீக்கியர்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர். இப்போது புல்லருக்கு ஏற்பட்டிருக்கும் மனநல பாதிப்பு மற்றும் கருணை மனு, பரிசீலனைக் கால தாமதம் ஆகிய காரணங்களுக்காக புல்லரின் மரண தண்டனையை

**சமஸ்**

நிறுத்திவைத்திருக்கிறது உச்ச நீதிமன்றம். மரண தண்டனை முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டியது சரி. ஆனால், மரண தண்டனையிலிருந்து விடுவிக்கப்படுவதாலேயே ரோஜனாவும் புல்லரும் குற்றமற்றவர்கள் ஆகிவிடுவார்களா? தனி சீக்கிய மாநிலம் கோரும் குழுக்கள், "சீக்கிய தேசத்தை நோக்கிய பயணத்தின் முதல் வெற்றி" என்று ரோஜனா, புல்லர் விவகா ரங்களைக் கொண்டாடுகின்றன.

> "என் தந்தையை இழந்தேன். இனி, அவர் திரும்பி வரப் போவதில்லை. ஒரு முன்னாள் பிரத மரான என் தந்தைக்கே நீதி கிடைக்க வில்லை என்றால், இந்நாட்டின் சாமானி யனுக்கு எப்படி நீதி கிடைக்கும்?" என்கிற ராகுல் குரலின் வலி கேலிக்குரியதாகிறது



இதற்கும் "எழுவர் விடுதலை, தமிழீழ விடுதலை நோக்கிய பயணத்தின் முதல் வெற்றி" என்ற கொண்டாட்டத்துக்கும் என்ன வேறுபாடு?

அப்பாவிகளா, போராளிகளா?

இந்தியாவின் மோசமான அரசியல் படுகொலைகளில் ஒன்று ராஜீவ் படுகொலை. நீதிமன்றம் இதில் சம்பந்தப்பட்டவர்களை விடுவிக்கலாம் என்று பரிந்து ரைத்திருப்பதும் தமிழக அரசு விடுவிக்க முடிவெடுத்திருப்பதும் மனிதாபிமான அடிப்படையில்தானே தவிர, அவர்கள் நடந்த குற்றத்தோடு துளியும் தொடர் பற்றவர்கள் என்கிற அடிப்படையில் அல்ல.

இத்தனை நாட்களும் அப்பாவிகள் என்று கூறியே அவர்கள் விடுதலையைக் கோரி னோம். இப்போது தியாகிகள் என்கிறோம். எனில், அவர்களை யாரென்று அடையா ளப்படுத்து கிறோம்? பேரறிவாளன் தூக்குக் கயிற்றின் முன் நின்றபோது, கூக்குரலிட்டோம். அப்சல் குருவின் குரல்வளை நெரிபடும் போதோ, வாய் மூடி. முகம் திருப்பி நின்றோம்.

"என் தாய் - தந்தை கையால் சாப்பிடக் காத்திருக்கிறேன்" என்கிற அரித்ரா குரல் நமக்கு வலிக்கிறது. "என் தந்தையை இழந்தேன். இனி, அவர் திரும்பி வரப் போவதில்லை. ஒரு முன்னாள் பிரதமரான என் தந்தைக்கே நீதி கிடைக்க வில்லை என்றால், இந்நாட்டின் சாமானியனுக்கு எப்படி நீதி கிடைக்கும்?" என்கிற ராகுல் குரலின் வலி கேலிக்குரியதாகிறது என்றால், நாம் யார்?

நேற்றுவரை யாரும் மரண தண்டனையின் பெயரால் கொல்லப்பட்டு விடக் கூடாது என்று இங்கு கூட்டங்கள் நடந்தன. அதுவே அஹிம்சை என்றோம். இன்றைக்கு, ராஜீவ் கொல்லப்பட்டிருக்கக் கூடாது என்று அவருடைய கட்சியினர் கூட்டங்கள் நடத்தும்போது, அவர்களை நோக்கிக் கல் வீசப்படுகிறது; ராஜீவ் சிலைகளின் முகம் சிதைக்கப்பட்டு; தலை தகர்க்கப்படுகிறது. எனில், நாம் சொல்ல விழைவதுதான் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்க தீர்மானம்:

# தமிழ் மக்களையும், சிங்கள தீவிரவாதிகளையும் ஒருசேர ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது!

ஐநா மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்காவால் சமர்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைபு, தமிழ் மக்களையும், சிங்கள தீவிரவாதிகளையும் ஒருசேர ஏமாற்றத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

அமெரிக்கா உட்பட சர்வதேச சமூகம் ஒரு துணைக்கருவியே தவிர அது மாத்திரம் எமக்கு நிம்மதியையும், நியாயத்தையும் கொண்டுவந்து தந்து விடாது என்றும், உள்நாட்டிலே இந்த அரசுக்கு எதிரான ஜனநாயக போராட்டம் மற்றும் தென்னிலங்கை அரசியல் நகர்வுகள் மூலமாகவே தமிழ் மக்கள் நியாய இலக்கை அடைய முடியும் என நாம் எப்போதும் சொல்லி வந்தது இன்று சரியாகியுள்ளது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாடு கடந்த வாரம் கொழும்பில் இடம்பெற்றது. இம்மாநாட்டில் உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

இலங்கை வந்து செல்லும் அமெரிக்க அரச பிரமுகர்கள் வரிசையாக வடக்குக்கு சென்று பேச்சுவார்த்தைகள் நடத்திய போதிலும், துன்புற்று வாழும் தமிழ் மக்களின் துன்பங்களுக்கு அவர்கள் முன்னுரிமை கொடுக்கவில்லை என இன்று தெரிய வந்துள்ளது. சர்வதேச விசாரணை என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்ட போதும், இன்று அமெரிக்க அரசு இலங்கை அரசுக்கு மீண்டும் கால அவகாசம் கொடுத்துள்ளது என்பதுதான் நிதர்சனம். அதேபோல் அமெரிக்க தீர்மானம் மூலம் "இதோ, அதோ வருகிறது, மின்சாரக்கதிரை" என கோஷமிட தயாராக இருந்தவர்களுக்கும் இந்த தீர்மான வரைபு ஏமாற்றத்தை தந்துள்ளது. இவை ஜனநாயக மக்கள் முன்னணிக்கு ஆச்சரியம் இல்லை. ஆனால், எதிர்பார்த்து இருந்தவர்களுக்கு ஏமாற்றம் ஆகும்.

கைது செய்யப்பட்டு, சரணடைந்து, கடத்தப்பட்டு சிறைகூடங்களில் வாடும் தமிழ் கைதிகளின் பிரச்சினைக்கு தீர்வு இல்லை. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், அனைத்து சிறைக்கூடங்களிலும், உண்ணாவிரத போராட்டத்தை நடத்திய கைதிகளுக்கு விசேட நீதிமன்றங்களை



அமைப்போம் என அமைச்சர்கள் நிமல் சிறிபாலவும், ரவுப் ஹக்கீமும் உத்தரவாதம் வழங்கினார்கள். இன்று வரிசையாக கைதிகள் இறந்து போவதை தவிர எதுவும் மாற்றம் பெறவில்லை.

சமீபத்தில் என்னை சந்தித்த ஒருகாலத்தில் மலையகத்தில் இருந்து சென்று வன்னியில் குடியேறி வாழும் ஒரு தமிழ் தாய் இப்படி சொன்னார். "ஐயா, என் கணவனை கடத்தி போனார்கள். மகனையும் இராணுவம் பிடித்துகொண்டு போனது. இப்போது என் பிரச்சனை என் கணவரையும், மகனையும் தேடுவது அல்ல. என் பருவ வயது மகளையும், என்னையும் பாதுகாத்து கொள்வதே என் போராட்டம்". இது போர் முடிந்த வலயத்தில் வாழும் சுமார் ஒரு இலட்சம் நிர்க்கதியாயுள்ள தமிழ் மகளிரது கண்ணீர் படலத்தின் ஒரு சிறு துளி.

வடக்கு மாகாணசபை எப்படி நடக்கிறது என மன்மோகன் சிங், நமது ஜனாதிபதியை கேட்டாராம் என ஊடக செய்தி கூறுகிறது. அதற்கான பதிலை வழங்கக்கூடிய பொருத்தமான நபர் விக்கினேஸ்வரன் ஆகும். அவர் அதை ஏற்கனவே கூறிவிட்டார். வடமாகாணசபை என்ற வெற்று பாத்திரத்தையே தொடர்ந்து னக்கிக்கொண்டு இருக்க வேண்டும் என அரசு நினைப்பதை பட்டவர்த்தனமாக விக்கினேஸ்வரன் கூறிவிட்டார்.

இவற்றையெல்லாம் அமெரிக்க வரைபு கணக்கில் எடுக்கவில்லை. சர்வதேச சமூகம் அல்லது அமெரிக்கா அனைத்து தீர்வுகளையும் அள்ளி வழங்கும் என, உள்நாட்டு ஜனநாயக போராட்டங்களை ஒத்தி வைக்க கூடாது. சர்வதேச சமூகம் அவசியம்தான். ஆனால், அது துணை பாத்திரம்தான் வகிக்க முடியும். நாம் வாழும் பூமியில் நாம் அரசியல்ராதியாக பலமாக எம்மை நிலைநிறுத்திக்கொண்டு ஜனநாயக போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும், தென்னிலங்கை அரசியல் நகர்வுகளுடன் ஒன்றிணைவோம் என்றும் நாம் சொல்லி வந்தவை சரியாக அமைந்து விட்டன."

## அமெரிக்க பிரேரணை:

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஏமாற்றமளிக்கிறதாம்

ஐநா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் அமெரிக்காவின் முன்னெடுப்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை முன்வரைவு, யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களை ஏமாற்றிவிட்டதாக இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலை வலியுறுத்திவரும் சிறுபான்மை சமூகங்களின் தலைவர்கள் கூறியுள்ளனர்.

பாரனரமான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கும் நோக்குடன் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

போர்க்கால குற்றங்கள் பற்றி விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணை கோரப்படும் என்று சர்வதேச சமூகம் முன்னெடுத்துவந்த பிரச்சாரங்கள் பொய்த்துப் போயிருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கொழும்பில் கடந்த வாரம் புதன்கிழமை நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்தை மட்டும் சர்வதேச சமூகம் விரும்புகிறதே ஒழிய, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கமே அதற்கு இல்லை என்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் கூறினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பேசிய ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், காணாமல்போனவர்கள் மற்றும் கடத்தப்பட்டவர்களின் உறவினர்களுக்கும் அரசியல் கைதிகளுக்கும் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கும் நீதி வழங்க சர்வதேச சமூகம் தவறிவிட்டதாகக் கூறினார்.

தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை இலங்கை அரசாங்கம் தொடர்வதற்கு சாதகமாகவே அமெரிக்காவின் முன்னெடுப்பில் தீர்மான வரைவு முன் வைக்கப்பட்டுள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதற்கிடையே, ஐநா மனித உரிமைகள் பேரவையின் 25-வது அமர்வில் உரையாற்றிய இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்று கடந்த மாதம் கூறிய மனித உரிமைகள் உயர் ஆணையர் நவி பிள்ளையின் அறிக்கையை கடிந்து பேசினார்.

இலங்கையில் கடந்த 12 மாதங்களில் நல்லிணக்க நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் காணாமல்போனவர்கள் பற்றி ஜனாதிபதி ஆணைக்குழு விசாரித்துவருவதாகவும் ஜீ.எல் பீரிஸ் இங்கு கூறினார்.

கடந்த 30 ஆண்டுகால போர்க்கால இழப்புகள் பற்றி கணக்கெடுப்பு நடந்துள்ளதாகவும் 20 ஆண்டுகளுக்கு முன்னர் விடுதலைப் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சுமார் 75 ஆயிரம் முஸ்லிம்களை மீள குடியமர்த்தும் வேலைகள் நடந்துவருவதாகவும் வெளியுறவு அமைச்சர் ஐநா மனித உரிமைகள் பேரவையில் தெரிவித்தார்.

முன்னாள் போர்ப் பிரதேசங்களிலிருந்து இராணுவம் படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாகவும் மக்களின் சிவில் வாழ்க்கையில் இராணுவத்தின் தலையீடுகள் எதுவும் இல்லை என்றும் இலங்கை அமைச்சர் ஐநாவில் கூறினார்.

இனப்பிரச்சனைக்கு நிரந்த தீர்வு காண்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே பங்கெடுக்க மறுத்துவருவதாகவும் கூறிய ஜீ.எல் பீரிஸ், வடக்குப் பிரதேசங்களில் இன விகிதாசாரத்தை சிதைக்கும் முயற்சிகள் நடப்பதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துப் பேசினார்.

## அமெரிக்க தீர்மானம்:

# தமிழர்கள் அதிருப்தி!

ஐநாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமெரிக்காவின் உத்தேச தீர்மானம் தொடர்பில் புலம்பெயர் தமிழர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் சமர்ப்பிக்கப்பட உள்ள தீர்மானம் தொடர்பில் திருப்தி கொள்ள முடியாது என புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.




அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் சமர்ப்பிக்கப்பட உள்ள உத்தேச தீர்மானம் கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது. கடந்த காலங்களில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு நிகரான வகையிலேயே தற்போதைய தீர்மானமும் அமைந்துள்ளதாக பிரித்தானிய தமிழர் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசாங்கம் விசாரணைகளை நடாத்த ஆர்வம் காட்டவில்லை என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம் பிள்ளையே சுட்டிக்காட்டியிருந்தார். எனினும், உத்தேச தீர்மான அறிக்கையில் இன்னுமொரு வருட கால அவகாசம் வழங்கும் வகையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

உள்ளக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும், ஓராண்டு காலத்தில் இந்த விசாரணைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தம் நிறைவடைந்து ஐந்து ஆண்டுகள் கடக்கவுள்ள நிலையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்க மேலும் ஓராண்டு காலம் காத்திருக்குமாறு பாதிக்கப்பட்ட மக்களிடம் கோருவது நியாயமற்றது என பிரித்தானிய தமிழர் பேரவை குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது எனவும் அது தெரிவித்துள்ளது.

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் ஆகிய பணிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு சர்வதேச சுயாதீன விசாரணைகளை தவிர்ந்த வேறு வழி கிடையாது என பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

உத்தேச அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், யுத்தத்தின் போது பாதிக்கப்பட்ட அனைவரினதும் முகத்தில் விழுந்த அறையாகவே கருதப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதிக்கு .....(1ம் பக்கத் தொடர்ச்சி)

முன்வைத்து ஜனாதிபதிக்கான மகஜரை ஏற்பாட்டாளர்கள் கையளித்தனர்.
இந்தப் பேரணி தொடர்பாக கருத்துத் தெரிவித்த கல்முனை தமிழ் சிவில் சமூகத்தின் தலைவரான பொன். செல்வ நாயகம், ஜனாதிபதியின் கரத்தை பலப்படுத்துவதற்கான பேரணி இது என்று தெரிவித்திருந்தார்.
இந்தப் பேரணியில் தமிழ் மக்களை கலந்து கொள்ளவேண்டாம் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் விடுத்த வேண்டுகோளையும் மீறி கல்முனை, பாண்டிருப்பு, நீலாவணை, மணற்சேனை, நற்பிட்டிமுனை, பெரிய நீலாவணை, சேனைக் குடியிருப்பு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்களும் கிராமிய சங்கங்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் ஆகியோருட்பட பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கொன்றுவீசப்பட்ட...(5ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் சுகயீனமுற்றுள்ள தனது தாயாரான ஆசிரியை ஈஸ்வரி வேலாயுதம் அவர்களை பார்ப்பதற்காக தனது சொந்த ஊருக்கு சென்றிருந்த சமயம் 2008 மே மாதம் சுட்டு கொலை செய்யப்பட்டார்

### ரேலங்கி செல்வராஜா



இலங்கையில் இருந்த முன்னணி தமிழ் வானொலி மற்றும் தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஆவார். தொடக்க நாட்களில் திரைப்பட நடிகையாகவும் இருந்த இவர் தனது கணவருடன் சேர்த்து ஆகஸ்ட் 12 , 2005 கொழும்பில் வைத்து புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.இவர்களின் கொலையின்போது ஒரு வயதும் அடையாத அவர்களது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பியது.
இப்படி இன்னும் பலர் துரோகிகள் என்ற முத்திரை குத்தப்பட்டு கொன்று வீசப்பட்டனர். போர் தின்ற மாந்தர்களான இந்த மாபெரும் பெண் ஆளுமைகளை இந்த சர்வதேச பெண்கள் தினபொழுதுகளில் நினைவுகூருவோம்.

## இலங்கை..... .(12ம் பக்கத் தொடர்ச்சி) .

தெளிவான ஆதாரங்கள் காணப்பட்ட போதிலும் உரிய விசாரணைகளை அரசாங்கம் நடாத்தத் தவறியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். எனவே ஐக்கிய நாடுகள் அமைப்பு இலங்கை விவகாரத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் உதயமாகியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்காவின் .(12ம் பக்கத் தொடர்ச்சி) .

பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து விட்டது. எனவே, இனிவரும் ஒரு வருட காலத்தில் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நிலைமை உருவாகும்" எனக் குறிப்பட்டுள்ளார்.

## சிறிலங்கா.......(7ம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை ஆழிப் பேரலையிலிருந்து பாதுகாத்ததற்கு நன்றி தெரிவித்து இக்கிராமவாசிகள் எவ்வித மத மற்றும் சமூக வேறுபாடுகளின்றி ஒற்று மையாக இந்தப் பெண் தெய்வத்தின் ஆலயத்திற்குச் சென்று வழிபடுகிறார்கள். கொம்பு விளையாட்டு என்ற விழாவின் மூலம் 15 நாட்கள் வரை பாணம மக்கள் கண்ணகியை வழிபடுகின்றனர். இந்த விழாவின் மூலம் கடந்த காலத்தில் ஏற்பட்ட கசப்பான சம்பவங்களுக்கு மன்னிப்புக் கோரும் வகையில் இந்த விழா மேற்கொள்ளப்படுகிறது.
மாலதி டீ அல்விசின் கருத்தின் பிரகாரம், இந்த நாட்டில் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்த வேண்டுமானால் சிறிலங்கா அரசாங்கம் மிக நீண்ட காலத்தை செலவிடத் தேவையில்லை. இதற்கான பாதை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே போடப்பட்டுவிட்டது என்பது அல்விசின் வாதமாகும்.
நன்றி.புதினப்பலகை

# படையினருக்கு துரோகம் இழைக்கப்பட மாட்டாது



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக போராடிய படையினருக்கு துரோகம் இழைக்கப்பட மாட்டாது என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளையின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து, படையினருக்கு துரோகம் இழைக்கப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.
சில படையினருக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உள்ளக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட் டுள்ளார். குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் குறித்த படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.
படையினர் மற்றும் மக்களை பாதுகாப்பதற்காக எந்தவிதமான சவால்களையும் சந்திக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் அல்லது சில நாடுகளின் அழுத்தங்களுக்கு அடி பணியப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார். நவனீதம்பிள்ளை பொய்யுரைத்து வருவதாக அமைச்சர் சமரசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

## அமெரிக்க...(6ம் பக்கத் தொடர்ச்சி)

நாடகத்தினை அரங்கேற்றியிருக்கின்றார். கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நடைபெற்ற விடயங்களை தலைகீழாகப் புரட்டிப் போடும் செய்தி ஒன்றினை மாவை சேனாதிராஜா ஊடாக புனைந்திருக்கிறார் சம்பந்தன்.
குறிப்பாக, "பல நாடுகளுடன் கூட்டமைப்பு பேச்சு நடத்தும்" என்ற தலைப்பில் சில இணையத்தளங்களில் செய்திகள் வெளியா கியிருந்தமையை வாசகர்கள் அறிந்திருப்பார்கள்.
ஆக, ஐ.நாவில் தீர்மானத்தினை முன்வைக்கின்ற அமெரிக்காவிடம் கூட்டமைப்பு கையளித்த மனுவில் என்ன விடயத்தினை குறிப்பிட்டிருக்கின்றார்கள் என்பதை சக நாடாளுமன்ற உறுப்பின ர்களிடமே வெளியிட மறுத்துள்ள நிலையில் இரண்டுங் கெட்டான் நிலையில் விளங்கி வருகின்ற, கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் காத்திரத்தன்மையை சிதைத்த சூத்திர தாரியாகிய இந்தியாவிடம் விசாரணை தொடர்பில் வலியுறுத்தப்போவதாகவும் ஒரு கதையினை மாவை சேனாதிராஜாவின் துணையுடன் சம்பந்தன் அவிழ்த்து விட்டிருக்கின்றார்.
இதனிடையே, ஜெனீவா கூட்டத் தொடருக்கு முன்பாக அங்கு நடைபெறும் ஆலோசனைக் கருத்தாடல்களில் பங்கே ற்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தராக சர்வதேச தளத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்ற திருவாளர் சுமந்திரன் சென்றிருக்கிறார். கடந்த மாதம் ஜெனீவா சென்ற கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரனை எந்த ஒரு வெளிநாட்டுப் பிரதிநிதிகளையும் சந்திக்க அனுமதிக்க விடாது ஒதுக்கி அவர் மனம் நொந்து அங்கிருந்து திரும்பியதாகவும் இதற்கு முன்னர் நடைபெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் சுமந்திரனை சுரேஷ் பிறேமச்சந்திரன் கடுமையாக திட்டித் தீர்த்ததாகவும் தெரியவந்தது.
இதேவேளை, சுமந்திரனின் உண்மை முகத்தினை அனந்தி சசிதரன் யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் முன்னிலையில் போட்டுடைத்திருக்கின்றார். யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற பத்திரி கையாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த, அனந்தி சசிதரன் ஜெனீவாவிற்கு சென்று அங்கு எதனையும் கதைக்கவில்லை என சில ஊடகங்கள் முன்வைத்த குற்றச் சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் அனந்தியின் கருத்துவெளிப்பாடு அமைந்தி ருக்கிறது,
ஜெனீவாவில் சர்வதேச பிரநிதிகளைச் சந்தித்து காணாமல் போனோர் தொட ர்பிலும், தாயகத்தில் எமது மக்கள் எதிர் கொண்டு வருகின்ற நெருக்கடி நிலை மற்றும் இறுதிப்போரின் போது நடை பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் கதைப்பதற்காகச் சென்றிருந்தேன்.
ஆனாலும் சந்திப்புக்களை மேற்கொள்ளச் சென்றபோது, எங்களை அழைத்துச் சென்ற சுமந்திரன், 'உங்களை விடுதலைப் புலிகளாகவே சர்வதேச பிரதிநிதிகள் பார்க்கிறார்கள். எனவே, நீங்கள் ஒன்றும் கதைக்கவேண்டாம்' என்று தன்னை கட்டுப்படுத்தியதாக தெரிவித்த அனந்தி, தான் ஜெனீவா செல்லும் வரையில் தனக்கு இவ்வாறான ஒரு நிலை ஏற்படும் என்பதை தான் அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவித்தார்" எனவே அனந்தி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் வாய் திறந்துவிடக் கூடாது என்பதில் மிகச் சாமர்த்தியமாக சுமந்திரன் நடந்திருப்பதாகவே அனந்தியின் கருத்து வெளிப்பாடு அமைந்திருக்கிறது.
இதேவேளை பல வாரங்களாக வெளி நாடுகளின் பிரதிநிதிகளை தனியாகச் சந்தித்து கலந்துரையாடிவரும் சுமந்திரன் என்ன கதைக்கிறார்? எதனை வலியுறுத்து கிறார்? என்பதை யாரும் அறிய முடியாத நிலையே காணப்படுகின்றது. புலம்பெயர் தேசங்களில் பல்லாயிரம் மக்கள் போராடிக் குரல் கொடுத்தாலும் தாயகத்தில் தமிழ் மக்களால் பெரிதாக கொள்ளப்படுகின்ற ஒரு கட்சி என்ற அடையாளத்தை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தும் சுமந்திரன் அதன் ஊடாகவே தமிழினத்தின் கருவறுக்கத் துணிந்து செயற்படுகின்றார்.
இதனிடையே அவுஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சுமந்திரன் அமெரிக்கப் பிரேரணையை முன்மொழியு மாறு அவுஸ்திரேலிய அரசை வலியுறுத தியதாக செய்திகளும் வெளியிட ப்பட்டுள்ளன. எதுவுமே அற்ற சிங்கள அரசுக்கு சாதகமான ஒரு பிரேரணையை முன்மொழிதல் அல்லது ஆதரித்தல் என்பது தமிழ் மக்களுக்கு எந்த விதத்திலும் பயனாகப் போவதில்லை. ஒட்டுமொத்த தமிழினத்தின் எதிர்பார்ப்பையும் தமிழ் மக்களின் இரத்தத்தில் வியர்வையில் கண்ணீரில் ஏறி நின்று அந்த இனத்திற்கு குழி தோண்டும் மிக மோசமான தமிழ் அகராதியில் இடம்பெற்றிருக்காத ஒரு மிகப் பெரிய துரோகத்துக்கு வடிவம் கொடுக்கும் சுமந்திரன்-சம்பந்தனை வரலாறு எந்த வகைக்குள் அடக்கப்போகிறது என்பதை காலம் தான் வரையறுக்கவேண்டும்.
ஆக, கொழும்பில் பிறந்து, வளர்ந்து, சட்டம் பயின்று, ஜி.எல்.பீரிஸின் ஆஸ்தான சீடனாக தன்னை அடையாளப்படுத்தி, ஆங்கிலத்தில் யோசித்து தமிழுக்கு மொழிபெயர்த்து எழுதி வாசித்து, சிங்களப் பெண்களை தனது பிரத்தியேக செயலாளர்களாகவும் பணியாளர்களாகவும் வைத்துக் கொண்டு அரசியல் செய்யும் ஒரு நபருக்கு, இந்தப் போராட்டம் தோன்றியது எதனால்? தமிழீழப் பிரகடனம் செய்தது விடுதலைப்புலிகளா? அல்லது அதற்கு முன்னிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியா? என்பது தெரிந்திருக்க வாய்ப்புள்ளதா? அல்லது எண்ணிப்பார்க்க முடியாத நினைத்துப்பார்க்க முடியாத இதுவரை வெளித்தெரியாத பல்லாயிரம் தியாகங்கள் எல்லாம் எதற்காக நிகழ்ந்தன என்பது புரியுமா? இன்றுவரை தாயகம் திரும்பி தங்கள் சொந்த நிலத்தினை தங்கள் பெற்ற தாயை வாழ்ந்த சுற்றத்தை எவற்றையும் இன்றும் பார்க்க முடியாது புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்ற தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் உண்மையான அர்ப்பணிப்புக்கள் புரியுமா?
இன்று கூட்டமைப்பு என்ற ஒரு சக்தி, போராட்டத்தின் வாசனை எதுவுமே தெரியாத சுமந்திரனை தமிழ் மக்களின் பிரதிநிதியாக உலகம் சுற்றவைத்திருக்கிறது என்றாலோ, ஆன்மீகம், கம்பன்கழகம் என்று தனது இறுதிக்காலத்தை கழிக்க முற்பட்டவரை வடக்கு மாகாணத்தின் அதிபதியாக்கி அவர் தான் அரசியல்வாதியல்ல நிர்வாகி என்று சொல்ல வைத்திருக்கின்றது எது என்றாலோ எல்லாவற்றுக்கும் பின்னால் நிற்பது எமது மக்களும் எமது மாவீரர்களும் கொடுத்த உயிர்விலைகள் தான்.
ஆக, அரசாங்கம் நினைத்துப் பார்க்க முடியாத, எத்தனை ஆயிரம் கோடி பணம் கொடுத்தும் சாதிக்க முடியாத பணிகளை செவ்வனே செய்துவருகின்ற தமிழ் மக்களுக்கான இலங்கை அரசின் னதர்களாக விளங்குகின்ற சம்பந்தன், சுமந்திரனின் அரசியல் பயணங்கள் முடிவுக்கு வந்தால் மட்டுமே எங்கள் பிரச்சினைகளுக்கும் முடிவு வரலாம்..
நன்றி - தமிழ்லீடர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகதிர்
ELUKATHIR

## புலிகளுக்கு அமெரிக்காவில் தடைநீடிப்பு!

அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ள தீவிரவாதிகள் அமைப்பின் பெயர் பட்டியலின்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் தடை செய்யப்பட்ட தீவிரவாத அமைப்பு பட்டியலில் சேர்த்துள்ளது.

உலகில் உள்ள 60 தீவிரவாத அமைப்புகளை அமெரிக்கா 2014ம் ஆண்டில் தடை செய்துள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 1997 ஒக்டோபர் 8ம் திகதி முதல் முதலில் அமெரிக்காவில் தடை செய்யப்பட்டது.அன்று தொடக்கம் ஒவ்வொரு வருடமும் புலிகள் அமைப்பு அமெரிக்காவில் தடை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதிகள் தொடர்பாக தொடர்ந்து விழிப்புடன் செயற்பாடு!




பயங்கரவாதிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் விழிப்புடன் செயற்பட்டு வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்ட போதிலும் தொடர்ந்தும் கண்காணிப்புப் பணிகள் மேற் கொள்ளப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். மியன்மாரில் நடைபெற்ற பிம்ஸ்டெக் மாநாட்டில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத அமைப்புக்கள் உலக அளவில் வலையமைப்புக்களை உருவாக்கிக் கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை இல்லாதொழிக்கும் முனைப்புக்களுக்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். எந்த வகையில் எவ்வாறான கொள்கைகளுக்காக பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்டாலும் அது உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாகவே அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத அனர்த்தங்களினால் மூன்று தசாப்த காலமாக நெருக்கடிகளை அனுபவித்த நாடு என்ற ராதியில், இலங்கை பயங்கரவாதத்தினால் ஏற்படக் கூடிய மனித மற்றும் பொருளாதார இழப்புக்களை நன்கு அறிந்து கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். துரதிஸ்டவசமாக இலங்கையின் பொருளாதாரம் பயங்கரவாதம் நிலவிய காலத்தில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னா நாட்டில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிம்ஸ்டெக் அமைப்புடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட விரும்புவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## இலங்கை மீது பொருளாதாரத்தடை நடைமுறைச் சாத்தியமற்றது!

இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிப்பது நடைமுறைச் சாத்தியமற்றது என மீன்பிடி மற்றும் கடல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பொறிமுறைமையின் கீழ் பொருளாதாரத் தடை விதிப்பது கடினமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரத் தடைகளை விதிக்க பாதுகாப்புப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப் பேரவையில் சீனாவிற்கும் ரஸ்யாவிற்கும் வீட்டோ அதிகாரம் காணப்படுகின்றது.

எனவே இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்புக்களின் போது சீனாவும் ரஸ்யாவும் அதனை எதிர்த்து வாக்களிக்கும் என அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அதனை நிராகரிக்கும் அதிகாரம் இலங்கை அரசாங்கத்திற்கு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

### இலங்கை மீது நடவடிக்கை:

**மனித உரிமை கண்காணிப்பகம் கோரிக்கை**

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியமாகின்றது என மனித உரிமை கண்காணிப்பகம். தெரிவித்துள்ளது. இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென தென் ஆபிரிக்க பேராயரும், மனித உரிமை ஆர்வலருமான டெஸ்மன் டுடு ஆண்டகை கோரியிருந்தார்.

இந்த கோரிக்கையானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கான ஓர் விழிப்பு கோரிக்கை என மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் தெரிவித்துள்ளார். யுத்தம் இடம்பெற்ற காலத்தில் உயிரிழந்தவர்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் இதுவரையில் விசாரணை நடாத்தவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

(11ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் பிரேரணையின் கடுமை குறைக்கப்பட்டது மகிழ்ச்சி

அமெரிக்காவின் இலங்கைக்கு எதிரான பிரேரணையின் கடுமையான தன்மை குறைக்கப்பட்டது மகிழ்ச்சியளிக்கின்றது. இதற்கு இந்தியாவின் பங்களிப்பும் கிடைத்திருக்கலாம் எனத் தெரிவித்த அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, காலம் தாழ்த்தாது தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முன்வர வேண்டுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், இலங்கைக்கு எதிராக ஜெனீவாவில் கடுமையான தொனியுடன் அமெரிக்கா முன்வைக்கவிருந்த பிரேரணை இறுதி நேரத்தில் அதன் 'கடும் தொனி" குறைக்கப்பட்டு முன்வைக்கப்பட்டமை மகிழ்ச்சியளிப்பதோடு இது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு கிடைத்த அங்கீகாரமாகும். அத்தோடு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வருட கால அவகாசமும் கிடைத்துள்ளது.

இப்போதே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின்

(11ம் பக்கம் பார்க்க)

# ஆப்கான் அதிபர் - ஜனாதிபதி சந்திப்பு



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் கர்சாய், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். கொழும்பில் உள்ள ஜனாதிபதியின் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டமை தொடர்பில் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி இதன் போது பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகம் அதனை எப்படி எடுத்துக் கொண்டாலும் ஒரு நாட்டின் அமைதி என்பது மனித உரிமைகளுக்கு சிறந்த உத்தரவாதமாக அமையும்.

போர் என்பது மனித உரிமைகளின் படுமோசமான எதிரியாகும். அமைதி என்பது மனித வளர்ச்சிக்கும், செழிப்புக்கும் வாகனமாக அமைந்துள்ளது. இதனை நாங்கள் இலங்கையில் கண்டுள்ளோம். நாங்கள் இலங்கைக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம் என்றார்.

இரு நாடுகளின் தலைவர்களும் அவர்களின் பிரதிநிதிகளும் இணைந்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர். இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொதுவான பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. அத்துடன் இரண்டு நாடுகளும் பொதுவான கலாசார பாரம்பரியத்தை கொண்டுள்ளதுடன் வலுவான நட்பு மற்றும் புரிதல்களை கொண்டுள்ளன.

உங்களது இலங்கை விஜயம் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவுவை வலுப்படுத்த மேலும் பங்களிப்பை வழங்கும் என்றார்.

அதேவேளை இந்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கைக்கும் - ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் மேலும் ஒத்துழைப்புகளை வழங்கும் உடன்படிக்கைகள் கையெழுத்திடப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org